# தேசிய
# வரவு செலவுத்திட்டம்
# 2026

## மக்கள் வரவுசெலவுத்திட்டம்

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பு



நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

நிதி, திட்டமிடல் மற்றும்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# தேசிய
# வரவு செலவுத்திட்டம்
# 2026
## மக்கள் வரவுசெலவுத்திட்டம்

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் இலகுபடுத்தப்பட்ட பதிப்பு

நவெம்பர் 2025

# மக்கள் வரவுசெலவுத்திட்டம் 2026

என்றால் என்ன?





வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பது அரசியலமைப்பின் தேவைப்பாடு ஒன்றாகும் (அரசியலமைப்பின் உறுப்புரை 148 -152). 2026 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடானது 2026 ஆம் ஆண்டில் அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கு மான செலவின வரையறைகளையும் அச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான முன்மொழியப்பட்ட வழிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. இந்த மதிப்பீடுகள் பொது மக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடியாதளவு சிக்கலான கணக்கீட்டு வடிவத்தில் வழங்கப்படுகிறது.

எனவே, தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களமானது, அரசாங்க வரவு செலவுத் திட்டம் பற்றிய தகவல்களை எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் தொழில்நுட்ப விடயங்களைக் குறைத்து வழங்குவதற்கு உத்தேசித்துள்ளது. மேலும், வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்களைத் தொகுத்து, வெளிப்படையாகவும், எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் பொது மக்களுக்கு ஏற்ற பதிப் பொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்று பொது நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு குறிப்பிடுகின்றது. இதன் மூலம், அனைத்து பிரசைகளும் வரி செலுத்துவோரும் வரி வருமானம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதையும், இந்த வளங்களை உகந்த முறையில் ஒதுக்குவதில் அரசாங்கத்தின் முன்னுரிமைகளையும் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முன்னெடுப்பானது வள ஒதுக்கீடு மற்றும் அதன் திறமையான பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் செலவினத் தலைப்புகள் என வகைப்படுத்தப்பட்ட மதிப்பீடுகளை முன்வைப்பதற்குப் பதிலாக, இந்த வெளியீடு துறை வாரியாக முக்கிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அரசாங்க செலவினம் பற்றிய எளிமையான தகவல்களை வழங்குகிறது. மேலும், படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் எதிர்பாரா சேவைகளுக்கான ஏற்பாடுகள் இத் துறைகளின் கீழ் கவனத்திற்கொள்ளப்படவில்லை. எளிதான உசாவுகைக்காக, துறைசார் மொத்தங்களின் ரூபா விவரங்கள் அண்மைய பில்லியனாக அண்ணளவாக மாற்றப்பட்டுள்ளன. எனவே, கணக்கீட்டு வடிவத்திலுள்ள புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் சிறிய வேறுபாடுகள் இருக்கலாம்.

வரவு செலவுத்திட்ட உரைக்குப் பின்னர் இந்த ஆவணம் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் சேர்த்து இற்றைப்படுத்தப்படும். பார்வைக் குறைபாடுள்ளவர்கள் கூட எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் இந்த ஆவணம் யுனிகோட் எழுத்துருவிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# உள்ளடக்கம்


1. இலங்கையில் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் செயன்முறை
2. 2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அடிப்படைகள்
3. வருமானம் மற்றும் செலவினங்கள்
4. ஒரே பார்வையில் வரவு செலவுத் திட்டம்




- ஆரோக்கியமான சமூகமொன்றினை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு
- கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் தனிச் சிறப்பை அடைதல்
- பாதுகாப்பான, வினைத்திறனான, சுற்றுச்சூழல் நட்புடைய மற்றும் நிலைபேறான போக்குவரத்து சேவைகள்
- கண்ணியமான, வசதியான வாழ்க்கையின் ஆவலுக்கான ஆதரவளிப்பு
- நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்த உற்பத்தி திறன்கொண்ட , நவீனமயப்படுத்திய நிலைபேறான விவசாயம்
- என்றும் பசுமையான வாழ்க்கையை நோக்கி
- அமைதியான மற்றும் நியாயமான சமூகத்திற்கான அர்ப்பணிப்பு
- தேசிய பாதுகாப்பு
- பொருளாதார சேவைகளும் தொழில்முனைவும்
- நிலையான மற்றும் பாதுகாப்பான எரிசக்தி விநியோகம்
- மக்கள் நட்பு அரச சேவை
- அனைவருக்குமான சமூகப் பாதுகாப்பு முறைமை

5. பொதுவான விடயங்கள்

# இலங்கையில் வரவுசெலவுத் திட்டத்தை தயாரிக்கும் செயன்முறை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் பகிரங்க நிதிசார் முகாமைத்துவ சட்டத்தின் விதிகளின்படி, தேசிய வரவு செலவுத் திட்ட செயன்முறை தெளிவான வருடாந்த நாட்காட்டியைப் பின்பற்றி தயாரிக்கப்படுகிறது. வரவு செலவுத் திட்ட நாட்காட்டி ஒவ்வொரு ஆண்டும் தேசிய வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து அங்கீகரிப்பதில் உள்ள செயற்பாடுகளின் தொடர்ச்சி மற்றும் கால அளவைக் காட்டுகிறது. வரவு செலவுத் திட்ட தயாரிப்பு செயன்முறை வரவு செலவுத் திட்ட அழைப்பு சுற்று நிருபத்தை வெளியிடுவதன் மூலம் ஆரம்பமாகின்றது., இது அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பிற பொது நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் நெறிப்படுத்தல்களை வழங்குகிறது. மேலும், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் எதிர்வரும் ஆண்டுகாலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் அடிப்படையில் செலவினங்களை மேற்கொள்ள அனுமதிக்கும் அங்கீகார சுற்றறிக்கையை வெளியிட்ட பின்னர் செயன்முறை முடிவடைகிறது.

| திகதி | செயற்பாடு |
|---|---|
| 30 யூன் \| 2025 | வரவுசெலவுத்திட்ட அழைப்பு சுற்றுநிருபத்தை வெளியிடுதல் |
| 01 யூலை\| 2025 | அமைச்சரவை அங்கீகாரம் பெறுதல் |
| 05 ஆகஸ்ட் - 04 செப்ட் 2025 | வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் |
| 08 செப்ட்\| 2025 | ஒதுக்கீட்டு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறுதல் |
| 18 செப்ட்\| 2025 | ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை வர்த்தமானியில் பிரசுரித்தல் |
| 26 செப்ட்\| 2025 | ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் முதலாவது வாசிப்பு |
| 07 நவெம் \| 2025 | இரண்டாவது வாசிப்பு – (வரவுசெலவுத்திட்ட உரை) |
| 08 நவெம் - 15 நவெம் 2025 | இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் |
| 13 நவெம் \| 2025 | குழு நிலை திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் |
| 17 நவெம் - 05 டிசெம் 2025 | மூன்றாவது வாசிப்பு மீதான விவாதம் |
| 18 டிசெம் \| 2025 | நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரத்தில் ஒப்பமிடுதல் |
| 30 டிசெம் \| 2025 | அதிகாரமளிக்கும் சுற்றுநிருபத்தினை திறைசேரியின் செயலாளரினால் வெளியிடுதல் |

# மக்கள் வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான அடிப்படை 2026

ஒரு குறித்த நிதியாண்டில் அரசாங்கத்தினால் செலவிடப்படவுள்ள செலவினங்களை அங்கீகரிப்பதற்காகவும், அந்த ஆண்டில் அரசாங்கத்தின் கடன் பெறுகைகளை அங்கீகரிப்பதற்காகவும், அந்த ஆண்டில் பொதுச் செலவினங்ளை முகாமை செய்வதற்கான சில ஏற்பாடுளைச் செய்யவும் பாராளுமன்றம் ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீட்டு சட்டமூலத்தை அங்கீகரிக்கின்றது. அதற்கமைய 2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட்டன.

1. வளமான நாடு, அழகான வாழ்க்கை – தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம்

2. 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் கட்டளைகளைப் பின்பற்றுதல்

    - குறித்த நிதியாண்டிற்கான மதிப்பிடப்பட்ட பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13% ற்கு மேல் அரசாங்கத்தின் ஆரம்ப செலவினம் இருக்கக் கூடாது (சட்டத்தின் 15 ஆம் பிரிவு)

    - வருடாந்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கு, முதன்மைச் செலவினத்தின் முன்மொழியப்பட்ட மதிப்பீட்டில் இரண்டு சதவீதத்தை விஞ்சாதிருத்தல் வேண்டும் (சட்டத்தின் பிரிவு 25)

3. நடுத்தர கால பேரியல் அரசிறை சட்டகம் 2025 - 2030, அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

    - 2026 இல் பொருளாதாரம் 4 - 5 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

    - 2026 இல் அரச வருமானம் மொத்த தேசிய உற்பத்தியின் 15.4 சதவீதத்தினை விட அதிகமாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

    - அரச செலவினம் மொத்த தேசிய உற்பத்தியின் 20.5 ஆக பேணப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

    - 2026 இல் பொது முதலீடு மொத்த தேசிய உற்பத்தியில் 4.0 சதவீதமாக பேணப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

    - 2026 இற்கான வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியின் 5.1 சதவீதமாக பேணப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

    - மொத்த தேசிய உற்பத்தியில் 2.5 சதவீதமான ஆரம்ப மீதியை (படுகடன் மற்றும் வட்டி செலுத்தல் செலவினம் நீங்கலாக) அடைதல் (கடன் குறைப்பு மற்றும் அரசிறை தாங்கு இருப்பினைக் கட்டியெழுப்புவதற்கு அத்தியவசியமான ஒரு படிமுறையாகும்).

# வருமானம் மற்றும் செலவினம்



## அரசாங்க வருமானம்

2026 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் **ரூபா 5,305 பில்லியன்** ஆகும். அதில் வரி வருமானமாக **ரூபா 4,850 பில்லியன்** ரூபாவும், வரியல்லாத வருமானம் மற்றும் மானியங்களாக **ரூபா 455 பில்லியன்** ரூபாவும் கிடைக்கப்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. வரி வருமானமானது, பிரதானமாக பெறுமதிசேர் வரி, வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரிகள் மற்றும் மதுவரி ஆகியவற்றைக் கொண்டிருக்கும் அதேவளை வரியல்லாத வருமானமாக திணைக்கள வருமானங்கள், வாடகைகள், பங்கிலாபங்கள் மற்றும் இலாபங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.




## அரசாங்க செலவினம்

2026 ஆம் ஆண்டிற்கான, படுகடன் மீள்கொடுப்பனவு உட்பட அரசாங்க செலவினங்கள் **ரூபா.8,980 பில்லியன்** என்பதுடன், இதில் **ரூபா 4,495 பில்லியன்** படுகடன் மீள்கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடன் வட்டி செலுத்துவதற்காக **ரூபா 2,617 பில்லியன்** மற்றும் கடன் மீளச் செலுத்துவதற்கு **ரூபா 1,878 பில்லியனும்** அதனுள் அடங்கும். மேலும் ஆரம்ப செலவினம் **ரூபா 4,485 பில்லியன்** என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முதன்மைச் செலவினத்தில் கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் வட்டி தவிர்த்து அனைத்து அரசாங்கச் செலவுகளும் அடங்கும். ஆரம்ப செலவினமானது சம்பளம் மற்றும் வேதனாதிகள் (ரூபா1,464 பில்லியன்), ஓய்வூதிய கொடுப்பனவுகள் (ரூபா 510 பில்லியன்) பிற மீண்டெழும் (ரூபா 1,131 பில்லியன்) மற்றும் மூலதனச் செலவுகள் (ரூபா 1,380 பில்லியன்) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## விரிவான வரவுசெலவு திட்ட மதிப்பீடுகள் மற்றும் மக்கள் வரவுசெலவு திட்டக் கட்டமைப்பு

2026 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் **24 அமைச்சுக்கள் , 134 மாகாணசபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்கள்** மற்றும் **21 விசேட செலவின அலகுகளின்** கீழ் செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. மக்கள் வரவுசெலவுத்திட்டம் குடிமக்களுக்கு எளிதாக விளங்கும் வகையில் அனைத்து செலவினங்களும் 12 **துறைகளில்** சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. மேலும் டிஜிட்டல் மயமாக்கல், பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற பன்முக முயற்சிகள் ஒவ்வொரு செலவினத் தலைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு மேலதிக தகவலுக்காக ஆவணத்தின் கடைசிப் பகுதியில் பதிவிடப்பட்டுள்ளது.

# ஆரோக்கியமான சமூகமொன்றினை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு



# நாடளாவிய வைத்தியசாலைகள் வலையமைப்பு

03 தேசிய வைத்தியசாலைகள் , 15 போதனா வைத்தியசாலைகள் , 14 விசேட வைத்தியசாலைகள், 21 மாவட்ட பொது வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகள், மருத்துவ சுகாதார அலுவலகங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பிரிவுகள் ஊடாக சுகாதார சேவைகள் வழங்கப்படல்.

சுகாதாரம் தொடர்பான நிறுவனங்களில் 25,447 மருத்துவர்கள், 41,075 தாதியர்கள், 9,169 மருத்துவச்சிகள், 2,317 பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார தொடர்புடைய நிறுவனங்களின் ஏனைய ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**2026 இற்கு ரூபா 654 பில்லியன்**

**மீண்டெழும் செலவினம்**
ரூபா **543.1** பில்லியன்

**மூலதன செலவினம்**
ரூபா **111.1** பில்லியன்

ரூபா **43.4** பில்லியன்
வைத்தியசாலை அபிவிருத்தி

ரூபா **363.3** பில்லியன்
வைத்தியசாலை தொழிற்பாடு

ரூபா **6.0** பில்லியன்
சுதேச மருத்துவ அபிவிருத்தி

ரூபா **187.7** பில்லியன்
மருத்துவ வழங்கல்கள்

ரூபா **12.9** பில்லியன்
திரிபோஷ உட்பட ஊட்டச்சத்து

ரூபா **10.4** பில்லியன்
நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்

ரூபா **1.3** பில்லியன்
சுகாதார ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

ரூபா **24.9** பில்லியன்
சுகாதார ஊழியர்களின் திறன் விருத்தி

ரூபா **4.2** பில்லியன்
சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவை

# உங்களுக்கு என்ன கிடைக்கும்?

| | | |
|---|---|---|
| 1. | மருந்துப் பொருட்கள், சத்திர சிகிச்சை மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை தொடர்ச்சியாக விநியோகிப்பதை உறுதி செய்தல் | ரூபா **185.7** பில்லியன் |
| 2. | வைத்தியசாலைகளுக்கான உயிரியல் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களை விநியோகித்தல் | ரூபா **13.5** பில்லியன் |
| 3. | வைத்தியசாலைகள் மற்றும் உயிரியல் மருத்துவ உபகரணங்களை பராமரித்தல் | ரூபா **31.2** பில்லியன் |
| 4. | கண்டி வைத்தியசாலையில், புற்றுநோய்ச் சிகிச்சை,என்பு மச்சை அறுவைச் சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் வசதிகள் மேம்பாடு | ரூபா **1.12** பில்லியன் |
| 5. | சிலாபம் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் வாட்டுகளை அபிவிருத்தி செய்தல் | ரூபா **0.65** பில்லியன் |
| 6. | இரத்தினபுரி வைத்தியசாலையில் இருதய சிகிச்சை, புற்றுநோய் மற்றும் சிறுவர் சிகிச்சை வசதிகளை அபிவிருத்தி செய்தல் | ரூபா **0.87** பில்லியன் |
| 7. | திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப் பிரிவின் வசதிகளை அபிவிருத்தி செய்தல் | ரூபா **0.70** பில்லியன் |
| 8. | பதுளை வைத்தியசாலையின் புதிய கட்டிட நிர்மாணம் | ரூபா **1.0** பில்லியன் |
| 9. | மன்னார் வைத்தியசாலையின் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு நிர்மாணம் | ரூபா **0.23** பில்லியன் |
| 10. | மொனராகலை வைத்தியசாலையின் தொழிற்பாட்டு வசதிகளை விரிவாக்கல் | ரூபா **0.5** பில்லியன் |
| 11. | கேகாலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவை அபிவிருத்தி செய்தல் | ரூபா **0.5** பில்லியன் |
| 12. | மாதிரி போக்குவரத்துக்கான மிதிவண்டிகள், மருத்துவக் கழிவுப் போக்குவரத்துக்குரிய லொறிகள், நோயாளிகளின் போக்குவரத்துக்கான நோயாளர் காவு வண்டிகள் , மருத்துவமனைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை புதுப்பித்தல், மருத்துவ உபகரணங்களை வழங்குதல், தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இடங்களில் மெது ஓட்டப் பாதைகள் மற்றும் உடற்பயிற்சி பரப்புகளை உருவாக்குதல் மற்றும் சுகாதாரம் தொடர்பான அலுவலகங்களை புதுப்பித்தல் ஆகியவற்றின் ஊடாக முதன்மை மருத்துவ நிறுவனங்களை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார சேவைகளின் அணுகல் மற்றும் தரத்தை மேம்படுத்துதல் | ரூபா **8.0** பில்லியன் |
| 13. | கட்டிடங்களை நிர்மாணித்தல், உபகரணங்களை வழங்குதல் மூலம் கண்டி, அனுராதபுரம், குருநாகல், திருகோணமலை உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் | ரூபா **4.5** பில்லியன் |
| 14. | இலங்கையில் புற்று நோயாளிகளுக்கு உயர் வலுமிக்க கதிர்வீச்சுடன் கூடிய உயர்தர கதிரியக்க சிகிச்சையை வழங்குதல் | ரூபா **2.5** பில்லியன் |
| 15. | வைத்தியசாலை ஊழியர்கள் உட்பட சுகாதாரத்துறை சம்பளம் | ரூபா **292.0** பில்லியன் |
| 16. | வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவு முகாமைத்துவம் | ரூபா **1.3** பில்லியன் |
| 17. | சுகாதார தகவல் தர மேம்பாடு | ரூபா **3.0** பில்லியன் |

## பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்



ரூபா **7.5** பில்லியன்

சுமார் 265,000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொதிக்காக

திரிபோஷ நிகழ்ச்சித் திட்டத்திற்காக

ரூபா **5.0** பில்லியன்




ரூபா **0.3** பில்லியன்

தாய்மை சார் மற்றும் முன்பிள்ளைப் பருவ ஊட்டச்சத்து திட்டத்திற்கு

ரூபா **4.2** பில்லியன்


சுவசெரிய அம்பியுலன்ஸ் சேவைக்காக



ஓய்வூதியம் பெறுனருக்கான அக்ரஹார காப்புறுதித் திட்டம்

ரூபா **1.2** பில்லியன்

# கல்வியில் தரம், சமத்துவம் மற்றும் தனிச் சிறப்பை அடைதல்



- 10,191 பாடசாலைகளில் சுமார் 236,129 ஆசிரியர்களை பணியமர்த்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் சுமார் 4.1 மில்லியன் மாணவர்களுக்கு தரமான பாடசாலைக் கல்வியை வழங்குதல்.

- 19 அரச பல்கலைக்கழகங்களில் 11,521 கல்விசார் பணியாளர்கள் மற்றும் சுமார் 12,826 கல்வி சாரா ஊழியர்களைக் கொண்டு 192,757 பயிலுனர் பட்டதாரி மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்குதல்.

- சுமார் 110,000 மாணவர்களுக்கு தொழிற் கல்வி வழங்குதல்.

**2026 இற்கு ரூபா 704 பில்லியன்**

மீண்டெலும் செலவினம்
ரூபா **605.5** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **98.8** பில்லியன்

ரூபா **537.1** பில்லியன்
பாடசாலை கல்வி

ரூபா **133.9** பில்லியன்
பல்கலைக்கழகக் கல்வி

ரூபா **20.2** பில்லியன்
தொழிற் கல்வி

ரூபா **7.1** பில்லியன்
விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம்

ரூபா **1.3** பில்லியன்
தம்ம பாடசாலை கல்வி

ரூபா **4.7** பில்லியன்
முன் பள்ளி கல்வி

**ரூபா 537.1 பில்லியன்**

**பாடசாலை கல்வி**

| | |
|---|---|
| பாடசாலைக் கல்வி தொடர்பான ஊழியர்களுக்கு சம்பளம் | ரூபா362.0 பில்லியன் |
| பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பராமரித்தல், பழுதுபார்த்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | ரூபா 23.7 பில்லியன் |
| க.பொ.த. சா./த., உ./த. உள்ளிட்ட அரசாங்க பரீட்சைகளை நடாத்துதல் | ரூபா 9.1 பில்லியன் |
| பிரிவெனாக் கல்விக்கு உதவுதல் | ரூபா 8.3 பில்லியன் |
| இடர்களுக்கு எதிராக பாடசாலைகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல் | ரூபா 0.8 பில்லியன் |
| பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்கள், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விடுதிகளை அபிவிருத்தி செய்தல் | ரூபா 0.98 பில்லியன் |
| தோட்டப்புற பாடசாலைகளுக்கு வசதிகள், ஸ்மார்ட் வகுப்பறைகள் வழங்குதல் | ரூபா 1.9 பில்லியன் |

**ரூபா 133.9 பில்லியன்**

**பல்கலைக்கழகக் கல்வி**

| | |
|---|---|
| சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை தாபித்தல் | ரூபா 6.4 பில்லியன் |
| வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தி | ரூபா 1.2 பில்லியன் |
| கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார நல விஞ்ஞான பீட கட்டிடத் தொகுதியை நிர்மானித்தல் | ரூபா 2.0 பில்லியன் |
| பல்கலைக்கழகங்களின் விடுதிகள், உணவகங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் ஆகியவற்றின் வசதிகளை நிர்மாணித்தல் | ரூபா 5.6 பில்லியன் |
| சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு அரச ஒத்துழைப்பு வழங்குதல் | ரூபா 7.5 பில்லியன் |
| பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய சம்பளம் மற்றும் பிற செலவுகளைச் செலுத்துதல் | ரூபா 88.5 பில்லியன் |

**ரூபா 20.2 பில்லியன்**

**தொழிற் கல்வி**

| | |
|---|---|
| சகல மாகாணங்களிலும் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை சிறப்பு நிலையங்களாக தரமுயர்த்துவதுடன் அந்த தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் வழிகாட்டல் பிரிவுகளை நிறுவுதல் | ரூபா 2.0 பில்லியன் |
| TVET தொழிற் தள கருத்திட்டம் | ரூபா 0.7 பில்லியன் |
| தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்காக தொழில்முனைவோருக்கான கடன் வசதி திட்டம் ( SEPI) | ரூபா 0.3 பில்லியன் |
| ஒரு மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பயிற்சி நிலையத்தை தாபித்தல் | ரூபா 0.26 பில்லியன் |



# நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள்

## முன்பள்ளி



- **ரூபா 1.2 பில்லியன்** முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குரு அபிமானி கொடுப்பனவுகளுக்காக
- **ரூபா 3.5 பில்லியன்** முன்பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுக்காக

## பாடசாலை மாணவர்களுக்காக



- **ரூபா 11.5 பில்லியன்** பாடசாலைகள், தொழிற் கல்வி மற்றும் உயர் கல்வி பருவகால அனுமதிச் சீட்டுக்களுக்கான உதவுதொகை வழங்கல்
- **ரூபா** 33.6 **பில்லியன்** பாடசாலை ஊட்டச்சத்து உணவு நிகழ்ச்சித் திட்டம்
- **ரூபா** 6.4 **பில்லியன்** பாடசாலை சீருடைகள்
- **ரூபா** 2.5 **பில்லியன்** கஷ்டமான மற்றும் மிகவும் கஷ்டமான பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் உள்ள மாணவர்களுக்கு காலணிகள் வழங்குதல்
- **ரூபா** 1.5 **பில்லியன்** பெண் மாணவர்களுக்கான சுகாதார துவாய்கள் வழங்குதல்
- **ரூபா** 15.0 **பில்லியன்** பாடப் புத்தகங்கள் அச்சிடல்
- **ரூபா** 1.9 **பில்லியன்** புலமைப் பரிசில்கள் (தரம் 5)
- **ரூபா** 0.15 **பில்லியன்** விளையாட்டுப் பாடசாலைகளுக்கு போசாக்கு உணவு வழங்குதல்
- **ரூபா** 2.5 **பில்லியன்** பாடசாலை மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதித் திட்டம்
- **ரூபா** 9.0 **பில்லியன்** பாடசாலைப் பருவப் பிள்ளைகளுக்காக பாடசாலை காகிதாதிகள் கொள்வனவுக்கு

## அறநெறி பாடசாலை மாணவர்களுக்காக

- **ரூபா** 0.20 **பில்லியன்** அறநெறிப் பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு

## பல்கலைக்கழக மாணவர்களுக்காக



- **ரூபா** 5.0 **பில்லியன்** பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹபொல மற்றும் உதவு தொகைகள்
- **ரூபா** 3.0 **பில்லியன்** உயர் கல்விக்காக அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கான கடன் திட்டம்
- **ரூபா** 0.01 **பில்லியன்** பிற நாடுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் புலமைப் பரிசில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

## தொழிற் கல்வி



- **ரூபா** 0.24 **பில்லியன்** தொழிற் கல்வியில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மாணவர்களுக்கான கொடுப்பனவுகள்
- **ரூபா** 0.85 **பில்லியன்** நிபுணதா சிசு திரிய புலமைப் பரிசில்
- **ரூபா** 0.16 **பில்லியன்** தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள மாணவர்களுக்கான பருவகால சீட்டுகள்

பாதுகாப்பான,
வினைத்திறனான,
சுற்றுச்சூழல் நட்புடைய
மற்றும் நிலைபேறான
போக்குவரத்து சேவைகள்



# எதிர்வரும் வருடத்தில் மேற்கொள்ளப்போவது என்ன?

- நாடு முழுவதும் வியாபித்துள்ள சுமார் 12,500 கி.மீ,தேசிய நெடுஞ்சாலைகள், சுமார் 12,800 கி.மீ மாகாண வீதிகள், சுமார் 100,000 கி.மீ கிராமப்புற வீதிகளை தொடர்புடைய ஏனைய வீதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுடன், பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்.
- அதிக போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்ற தெரிவுசெய்யப்பட்ட பாதைகளை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்தல்
- சுமார் 50 கி.மீ. மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மானித்தலை தொடர்ந்து மேற்கொள்ளுதல்
- தினசரி சுமார் 320 புகையிரதங்களை இயக்குதல், சுமார் 1550 கி.மீ புகையிரத பாதைகள், சமிக்ஞைகள் மற்றும் புகையிரத ஊர்திகளைப் பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்.
- ஹிங்குராங்கொட விமான நிலைய நிர்மானப் பணியை நிறைவுசெய்தல்
- இலங்கை போக்குவரத்து சபை பேரூந்துகளை பராமரித்தல் மற்றும் வலுப்படுத்துதல்

**2026 இற்கு ரூபா 456 பில்லியன்**

மீண்டெலும் செலவினம் ரூபா **52.5** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **403** பில்லியன்

ரூபா **324.0** பில்லியன்
மூலதனம்-ரூபா 315.2 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 8.4 பில்லியன்
**வீதிகள்**
**- அதிவேகப் பாதை அபிவிருத்தி - ரூபா 104.4 பில்லியன்**

ரூபா **17.4** பில்லியன்
**பாலங்கள்**

ரூபா **76** பில்லியன்
மூலதனம்-ரூபா 41.4 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 34.6 பில்லியன்
புகையிரதம்

ரூபா **34.8** பில்லியன்
மூலதனம்-ரூபா 25.8 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 9 பில்லியன்
**போக்குவரத்து**

ரூபா **4.0** பில்லியன்
மூலதனம்-ரூபா 3.5 பில்லியன்
மீண்டுவரும்-ரூபா 0.5 பில்லியன்
**துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள்**

# உங்களுக்கு என்ன கிடைக்கும்?

**ரூபா 324 பில்லியன்**

மூலதனம்-ரூபா 315.2 பில்லியன்

மீண்டுவரும்-ரூபா 8.4

**வீதிகள்**

| | |
|---|---|
| தேசிய மற்றும் மாகாண வீதி வலையமைப்பின் பராமரிப்பு, புனரமைப்பு, அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் | ரூபா 50.4 பில்லியன் |
| போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக முன்னுரிமைப் பாதைப் பிரிவுகள் மற்றும் பிரதான பாதைகளின் சுற்றுவட்டங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் | ரூபா 22.0 பில்லியன் |
| முந்தைய வீதி அபிவிருத்தி திட்டங்களின் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட வீதிகளுடன் நாடு முழுவதும் கிராமப்புற வீதி வலையமைப்பை மேம்படுத்துதல் | ரூபா 62.0 பில்லியன் |
| கடவத்த - மீரிகம அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பொதுஹெர - ரம்புக்கன அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானத்தைத் தொடர்தல் | ரூபா 78.15 பில்லியன் |
| துறைமுக அணுகல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையை நிறைவு செய்தல் | ரூபா 12.5 பில்லியன் |
| வீதிகளை விரிவுபடுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு செலுத்துதல் | ரூபா 8.0 பில்லியன் |
| போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக கட்டுகஸ்தோட்டையில் புகையிரத பாதைக்கு கீழே ஒரு புதிய சுரங்கப்பாதையை நிர்மாணித்தல் உள்ளடங்கலாக கண்டி நகரத்திற்கான அணுகல் பாதைகளை மேம்படுத்துதல் | ரூபா 2.6 பில்லியன் |
| மரைன் டிரைவை துறைமுக அணுகல் நெடுஞ்சாலையுடன் இணைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு நடத்துதல், புத்தளத்தை மன்னாருடன் இணைப்பதற்கான மாற்றுப்பாதையை கண்டறிதல், நெடுந்தீவு காரை நகர் பாலம், இரத்தினபுரி புறவழிப் பாதை, பாண்டிருப்பு பாலம், கிண்ணியடி பாலம் மற்றும் கொக்கிளாய் பாலத்துடன் இணைப்பதற்கான மாற்று பாதையை அடையாளம் காணுதல் | ரூபா 1.1 பில்லியன் |
| ஆபத்தான பாதைப் பிரிவுகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துதல் | ரூபா 3.2 பில்லியன் |

**ரூபா 76 பில்லியன்**


மூலதனம்-ரூபா 41.4 பில்லியன்

மீண்டுவரும்-ரூபா 34.6 பில்லியன்

**புகையிரதம்**

| | |
|---|---|
| வசதியான நிகழ்நிலைப் பயணச் சீட்டுக்களை வழங்கிவதற்காக இலத்திரனியல் பயணச் சீட்டு முறையை (பிரவேஷா) விரிவுபடுத்துதல் | ரூபா 1.4 பில்லியன் |
| கொழும்பு புகையிரத நிலையத்தை பாதுகாப்பான, வசதியான மற்றும் சுத்தமான இடமாக மாற்றுவதற்காக நவீனமயமாக்கல் | ரூபா 0.8 பில்லியன் |
| தினசரி ரயில் சேவைகளைத் தொடர்வதற்காக ரயில் இயந்திரங்கள், பயணிகள் பெட்டிகள், புகையிரத பாதைகள் மற்றும் சமிக்ஞை அமைப்பைப் பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் | ரூபா 14.0 பில்லியன் |
| தினசரி ரயில் சேவைகளுக்காக ஐந்து புதிய ரயில்களை ரயில்வே தொகுதியில் சேர்த்தல் | ரூபா 3.3 பில்லியன் |
| வடக்கு புகையிரத பாதையில் புகையிரத சேவைகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, மாஹோ-ஓமந்தை புகையிரத பாதையின் பகுதியளவு முடிக்கப்பட்ட பாலங்கள், யானைக் கடவை மற்றும் சமிக்ஞை அமைப்பை நிறைவு செய்தல் | ரூபா 9.0 பில்லியன் |
| தினசரி புகையிரத சேவைகளைத் தொடர்வதற்காக தடையற்ற எரிபொருள் விநியோகத்தை வழங்குதல் | ரூபா 14.0 பில்லியன் |

## 2026 ஆம் ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட முக்கிய விரிவுபடுத்தல் மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டங்கள்




இது வீதி அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிடல் பிரிவினால் தயாரிக்கப்பட்ட வரைபடம்

1. ஜப்பான் நட்புறவு பாதை (0-2 கிமீ) (மாதிரி பாதை கருத்திட்டம்)
2. கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு வீதியின் (38+000 - 58+890 கி.மீ.) மற்றும் அவிசாவளை குறுக்கு பாதை (0+000-0+910) தார் இடல்
3. அம்பத்தலே முதல் கடுவெல வரை தாழ் மட்ட வீதி (8+500-13+000)
4. பிடகோட்டே தலவத்துகொட (0+000 -4+230)
5. கோட்டே - போப்பே 3+800 - 6+990 கி.மீ. (5+500)
6. மாலபே - கடுவல 0+000 - 5+630 கி.மீ.
7. "கொழும்பு - காலி - ஹம்பாந்தோட்டை - வெல்லவாய 8.34 - 9.64 கி.மீ.
   கவுன்சில் அவென்யூ , தெஹிவளை 0+00-0+140 கி.மீ."
8. பாகோட - பிடகோட்டே 0+ 000- 1+540 கி.மீ
9. 1) பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்தில் மெரைன் டிரைவ் ஊடான பாதசாரி மேம்பாலத்தை புனரமைப்பதற்கான மீதமுள்ள பணிகள்
   2) வெள்ளவத்தை புகையிரத நிலையத்தில் மெரைன் டிரைவ் ஊடான பாதசாரி மேம்பால மீள் நிர்மாணம்
10. நாவல ராஜகிரிய கால்வாயின் குறுக்கே நாவல பாலத்தை நிர்மாணித்தல்
11. ஏகல - கொடதெனியாவ (3+000-9+000)
12. ஏகல - கொடதெனியாவ (21+000-27+000)
13. வெலிவேரிய கிரிந்திவெல பாதையை அகலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் (6+000 - 12+860 கி.மீ)
14. உடுகம்பொல திவுலபிட்டிய பாதையை மேம்படுத்துதல் (0+000 - 13+000)
15. வத்தளை ஹேகித்த பாதையின் எஞ்சிய பணிகளின் நிர்மாணம் (0+000-1+500)
16. ஜாஎல ஏகல பாதை மற்றும் பேலியகொட புத்தளம் பாதையின் ஜாஎல குறுக்குப் பாதைக்கான மேம்பாடுகளின் மிகுதிப் பணி
17. நிட்டம்புவ-பஸ்யால பாதை கருத்திட்டம்
18. கொழும்பு ஹொரன பாதைக்கு தாரிடுதல் 24+950 - 28+180
19. "1) கொழும்பு காலி ஹம்பந்தோட்டை வெல்லவாய பாதையில் 45+460 - 50+970 இலிருந்து தாரிடுதல்
   2) கொழும்பு காலி ஹம்பந்தோட்டை வெல்லவாய பாதையில் 45+460 - 50+970 இலிருந்து தாரிடுதல்
   3) கொழும்பு காலி ஹம்பந்தோட்டா வெல்லவாய பாதையில் 51+250 - 52+370 இலிருந்து தாரிடுதல்
   4) கொழும்பு காலி ஹம்பந்தோட்டைவெல்லவாய பாதையில் 59+970 - 60+970 இலிருந்து தாரிடுதல்"
20. ஹொரவல பெலவத்த பிடிகல ப்பாதையில் பாலம் இலக்கம் 4/1 இன் மீள்நிர்மாண மீதிப் பணி
21. மஹையாவ சுரங்கப்பாதை மற்றும் பாதைப் பிரிவு (1+960- 2+213)
22. வில்லியம் கோபல்லாவ மாவத்த பாதை நிர்மணம் (2+900 -3+740)
23. வில்லியம் கோபல்லாவ மாவத்தையின் மட எலவின் கட்டமைப்புகள் (1+600 -3+740)
24. ஹூயிஸ் பீரிஸ் மாவத்தை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்(0+000 - 0+860)
25. பேராதனை ஹல்லோலுவ கடுகஸ்தோட்டை (3-10)
26. பேராதனை தெல்தோட்ட ரிகில்கஸ்கட 0-3
27. மேல் கம்பளை வீதி (0-2.28)
28. 1)பேராதெனிய தெல்தோட்ட ரிகில்கஸ்கட 28-42
   2)பேராதெனிய தெல்தோட்ட ரிகில்கஸ்கட 22.75-26"
29. கண்டி யாழ்ப்பாணம் 4 ஒழுங்கைகள் நிர்மாணம்(70+650 -72+750
30. கண்டி - யாழ்ப்பாணம் பாதையில் அடிப்படை திருத்தம் மற்றும் தார் இடல் [58+000 - 63+000 km]
31. 1) மாத்தளை - இல்லுக்கும்புர - லக்கல வீதியில் ஏ.சீ. தாரிடுதல் [8+000 - 10+000 கி.மீ.]
   2) மாத்தளை - இல்லுக்கும்புர - லக்கல வீதியில் [18+000 - 26+000 கி.மீ.] அடிப்படை திருத்தம் மற்றும் ஏ.சீ. தாரிடுதல்"
32. 1) பலபத்வெல - கலேவெல பாதையில் [23+000 - 27+000 கிமீ]
   2)அடிப்படை திருத்தம் மற்றும் தார் பூசுதல் பலபத்வெல - கலேவெல பாதையில் [19+000 - 23+000 கிமீ] அடிப்படை திருத்தம் மற்றும் தார் பூசுதல்
33. வத்தேகம - கந்தேநுவர - வாரியபொல வீதியில் [4+810 - 11+000 கீ.மி.] அடிப்படை திருத்தம் மற்றும் தாரிடுதல்
34. பலபத்வெல கலேவெல [0+000 - 2+400]
35. பலபத்வெல கலேவெல [28+750 - 30+750]
36. நார்டன் - மஸ்கெலியா வீதி (CH 7+000 கி.மீ. - 13+000 கி.மீ.) தாரிடுதல்
37. கரோலினா நார்டன் வனராஜா வீதி (சீஎச் 3+000 கி.மீ. - 8+530 கி.மீ.) தாரிடுதல்
38. ஹட்டன் - மஸ்கெலியா - டெல்ஹவுஸ் வீதி (சீஎச் 4+000 km - 22+000 கி.மீ.) தாரிடுதல்
39. கந்தேஹந்திய - அதிகரிகம - ரன்தெனிகல - லொக்கல் ஓயா வீதி (7+000 - 11+000)
40. கொழும்பு காலி ஹம்பம்தொட்ட வெல்லவாய வீதி (154+000 - 167.0)
41. கொழும்பு காலி ஹம்பம்தொட்ட வெல்லவாய வீதி (173.0- 185.04)
42. மாத்தறை அக்குரஸ்ஸ வீதி (4- 20.09)
43. காலி பத்தேகம வீதி (B128) (2+000-2+306) - சரேந்துகடே சந்தியின் மேம்பாடுகள்
44. காலி பத்தேகம வீதி (B128) (4+200-4+500) - கஹடுவத்த சந்தியின் மேம்பாடு
45. கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெல்லவாய (273.88 - 281.9 கிமீ) தாரிடுதல்
46. கொழும்பு - காலி - அம்பாந்தோட்டை - வெல்லவாய (242.94 -252.88 கிமீ) தாரிடுதல்
47. பெலியத்த கிரிந்த வீதியை மேம்படுத்துதல் (0+450 - 1+950 , 2+300-3+900 , 5+900 - 6+100 , 8+500 - 8+700 கி.மீ)
48. டிக்வெல்ல - பெலியத்த வீதி மேம்பாடு (4+000 - 7+000 கி.மீ)
49. தம்முல்ல வீரகெட்டிய வீதி மேம்பாடு (6+000 - 10+100 கி.மீ)
50. யாழ்ப்பாணம் - பொன்னாலை பருத்தித் துறை வீதியில் தாரிடல் அகலமாக்குதல் மற்றும் வடிகால் கட்டுமானம் (12+090-14+600),(0+650-1+720)"
51. கட்டுமானம் சாவகச்சேரி புலோலி வீதியில் ஏபிசி கல் பரப்புதல், அகலமாக்குதல் மற்றும் மதகு கட்டுமானம் (3+600-7+500)
52. ஆவரங்கால் - தொண்டமானாறு வீதிக்கான தார் இடல் மற்றும் அகலமாக்குதல் 0+000 - 6+000 கி.மீ.
53. தொண்டமானாறு - வல்லை - துன்னாலை வீதிக்கான ஏபிசி கல் பரப்புதல், அகலமாக்குதல் மற்றும் 3 மதகுகள் கட்டுமானம் 0+000 - 4+000
54. உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோவில் வீதியில் ஏபிசி கல் பரப்புதல் மற்றும் அகலமாக்குதல் (0+000-1+600)
55. A009 வீதியில் உள்ள டெப்போ சந்தியில் (252 கி.மீ) - அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடுகள்-நிலை 2
56. 1) முருங்கன் - சிலாவத்துறை வீதிக்கான அகலப்படுத்தல் மேம்பாடு (0+000 - 6+000 கி.மீ)
57. மாங்குளம் - வேலங்கூளான்குளம் வீதி அகலப்படுத்தல் மேம்பாடு 31+900 - 39+900 கி.மீ
58. வெள்ளிகுளம் - மாமடுவ வீதிக்கான அகலப்படுத்தல் மேம்பாடு (0+000-8+100)
59. கண்டி - யாழ்ப்பாண வீதியில் மூடு பலகம் உள்ளிட்ட வடிகான் கட்டுமானத்துடன் அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடு 176+000 - 179 +000 கி.மீ
60. பட்டிருப்பு- வெல்லாவெளி வீதி அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடு (1+430 - 2+850)
61. கொழும்பு-இரத்னபுரி-வெல்லவாய-மட்டக்களப்பு வீதி (Ch: 300+000 - 308 +000)km
62. கொழும்பு-இரத்னபுரி-வெல்லவாய-மட்டக்களப்பு வீதி (Ch: 312+000 - 320 +000)km
63. "1) அம்பாறை-இகினியாகல வீதி (சீஎச்: 17 +000-21+710)கிமீ"
64. "2) அம்பாறை-இகினியாகல வீதி (சீஎச்: 5+800 - 11+500)கிமீ"
65. மட்டக்களப்பு - திருக்கொண்டியடிமடு - திருகோணமலை (108.5+114)
66. கட்டுகஸ்தோட்டை - குருநாகல் - புத்தளம் வீதி (16+320-19+175) - (AA010)
67. நாரம்மல - தங்கொடுவ வீதியை மேம்படுத்துதல் (40+120 - 42+120 கிமீ)
68. பத்துலு ஓயா - உடப்புவ - அணிமுனை வீதி மேம்படுத்தல் (0+000 - 2+000 கிமீ)
69. கணேவல்பொல - தச்சிஹல்மிலேவ வீதி அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடு (27+000 - 31+000) கி.மீ.
70. ஹுரிகஸ்வெவ - கலங்குட்டிய - சியபலங்கமுவ - வெடகொலுவத்த வீதி அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடு (0+000 - 2+600) கி.மீ.
71. மரதன்கடவல ஹபரன திரிக்கொண்டியமடு (25 - 31)
72. மரதன்கடவல ஹபரன திரிகொண்டியமடு (57 - 61)
73. பண்டாரவளை லியங்கஹல்வெல பூனகல (15-20)
74. ஹப்புத்தளை தம்பேதன்ன (2-7)
75. தெமோதராவின் ஸ்ப்ரினவெலி பாதையில் தாரிடல் (12+920 -16+145)
76. பசறை ஹிகுருகடுவ பெல்வத்த பாதையில் தாரிடல் (9+000-15+000 கி.மீ.)
77. அவிசாவளை - ஹட்டன் - நுவரெலியா வீதி (0+065- 6+650)
78. நெலும்-தெனிய துந்தோட்டை 4/2 பாலம்
79. வரக்காபொல குறுக்குப் பாதை
80. பெல்மடுல்ல - எம்பிலிபிட்டிய -நோனகம பாதையில் தாரிடல் (15-30)
81. கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு பாதையில் (62+500 - 70+000) இலிருந்து தார் இடல்
82. கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு பாதையில் (74+000-86+000) இலிருந்து தாரிடல்
83. கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு பாதையில் (87+500-105+000) இலிருந்து தாரிடல்
84. பலாங்கொடா - ரஸ்ஸகல- உவெல்ல அகலப்படுத்தல் மற்றும் மேம்பாடு (5 - 9.38)
85. பலாங்கொடை - போவத்த - கல்தோட்டை வீத்தியில தார் இடல் (16- 23)
86. ஹுலந்தாவ பாலத்தின் புனரமைப்புகள் 4/4 (2+300)

| | | |
|---|---|---|
| கிராமப்புற பாலங்கள் மேம்பாடு | ரூபா **2.5** பில்லியன் | ரூபா **17.4** பில்லியன் பாலங்கள் |
| கொஹுவல மற்றும் கெட்டம்பே மேம்பாலங்களின் மீதமுள்ள பணிகள் | ரூபா **7.6** பில்லியன் | |
| தேசிய பாதைகளில் உள்ள பாலங்களை புனரமைப்பு செய்தல் | ரூபா **4.0** பில்லியன் | |

| | | |
|---|---|---|
| நீண்ட தூர சேவைகளுக்காக இலங்கை போக்குவரத்து சபையில் 600 புதிய பேருந்துகளைச் சேர்த்துக் கொள்ளுதல் | ரூபா **3.6** பில்லியன் | ரூபா **34.8** பில்லியன்<br>மூலதனம்-ரூபா 25.8 பில்லியன்<br>மீண்டுவரும்-ரூபா 9 பில்லியன்<br>போக்குவரத்து |
| பேருந்துகளைப் பழுதுபார்ப்பதற்காக இலங்கை போக்குவரத்து சபைக்கு 307 எஞ்சின் உபகரணப் பெட்டிகளை வழங்குதல் | ரூபா **2.0** பில்லியன் | |
| கண்டியில் பொதுப் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் கண்டி பன்முக போக்குவரத்து முனையத்தை உருவாக்குதல் | ரூபா **10.7** பில்லியன் | |
| இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் நிறுவன மேம்பாடு | ரூபா **2.0** பில்லியன் | |
| புதிய வாகனப் பதிவுக்கான இலக்கத் தகடுகளைக் கொள்வனவு செய்தல் | ரூபா **1.0** பில்லியன் | |

## பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

ரூபா **3.3** பில்லியன்

சமூக ரீதியாகக் கடமையாக்கப்பட்டுள்ள பேருந்து சேவையின் (சிசுசரிய, கமிசரிய, நிசிசரிய மற்றும் இரவு நேர பேருந்து சேவை) பங்களிப்பு

ரூபா **2.0** பில்லியன்

பொருளாதார ரீதியாக இலாபம் ஈட்டாத பாதைகளில் ஒரு நாளைக்கு 270,000 கி.மீ. நீளத்திற்கு சுமார் 1,500 இபொ.ச. பேருந்துகளை இயக்குதல்



கண்ணியமான,
வசதியான
வாழ்க்கையின்
ஆவலுக்கான
ஒத்துழைப்பு



# அடுத்த ஆண்டில் செய்யப் போவது என்ன?

- நடுத்தர காலத்தில் சுமார் 1 மில்லியன் புதிய குழாய் நீர் விநியோக இணைப்புகளை வழங்குதல்
- 3.1 மில்லியன் வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தற்போதுள்ள சுமார் 342 நீர் விநியோகத் திட்டங்கள் மூலம் தடையற்ற பாதுகாப்பான குழாய் மூல குடிநீர் வழங்கல்
- நாடு முழுவதும் சுமார் 3,780 சமுதாய நீர் விநியோகத் திட்டங்களின் நிலை பெறுதன்மையை உறுதி செய்தல்
- 2026 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் கொண்ட மக்களை இலக்காகக் கொண்டு சுமார் 20,000 வீட்டு அலகுகளின் கட்டுமான நடவடிக்கைகளைத் தொடர்தல்
- முழு நாட்டையும் உள்ளடக்கிய கிராமப்புற உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்

**2026 இற்கு ரூபா 169 பில்லியன்**

**மீண்டெலும் செலவினம் ரூபா 11.4 பில்லியன்**

**மூலதன செலவினம் ரூபா 157.6 பில்லியன்**



ரூபா **85.7** பில்லியன்
மீண்டுவரும்- ரூபா 0.64 பில்லியன்
மூலதனம்- ரூபா 85.1 பில்லியன்
**குடிநீர் வழங்கல்**



ரூபா **44.8** பில்லியன்
மீண்டுவரும் - ரூபா 1.7 பில்லியன்
மூலதனம் - ரூபா 43.1 பில்லியன்
**வீடமைப்பு அபிவிருத்தி**



ரூபா **19.6** பில்லியன்
**கிராமபுற அபிவிருத்தி**



ரூபா **13.5** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 7.5 பில்லியன்
மூலதனம் – ரூபா 6.0 பில்லியன்
**இளைஞர் மற்றும் விளையாட்டு**



ரூபா **5.4** பில்லியன்
மீண்டுவரும்- ரூபா 1.5 பில்லியன்
மூலதனம் – ரூபா 3.8 பில்லியன்
**நகர்ப்புறங்களில் உள்கட்டமைப்பு அபிவிருத்தி**

# பிரதான செலவின செயற்பாடுகள்



ரூபா **85.7** பில்லியன்

மீண்டுவரும்- ரூபா 0.64 பில்லியன்

மூலதனம்- ரூபா 85.1 பில்லியன்

**குடிநீர் வழங்கல்**

| | |
|---|---|
| பாததும்பர, பூஜாபிட்டிய, அக்குரணை, ஹரிஸ்பத்துவ, கங்காவட்ட கோரளை மற்றும் தும்பனை பிரதேச செயலக பிரிவுகளுக்கு (கண்டி வடக்கு மற்றும் பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத் திட்டம்) குழாய் மூலம் நீர் வழங்கல் | ரூபா **7.5** பில்லியன் |
| யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் | ரூபா **6.0** பில்லியன் |
| பதவிய,கெபிதி கொல்லாவ கஹடகஸ்திகிலிய, ஹொரவ்பத்தான மற்றும் ரம்பாவ பிரதேச செயலக பிரிவுகளுக்கு (அனுராதபுர வடக்கு நீர் வழங்கல் திட்டம் கட்டம் 11) குழாய் மூலம் நீர் வழங்கல் | ரூபா **7.4** பில்லியன் |
| மேல் மாகாணத்தின் தெற்குப் பகுதியில் நீர் வழங்கல் திறனை அதிகரித்தல், பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் தெஹிவளை மற்றும் மொரட்டுவவில் நீர் வழங்கல் வலையமைப்புகளை மேம்படுத்துதல் (களுகங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் கருத் திட்டம் 1) | ரூபா **1.1** பில்லியன் |
| கம்பஹா, அத்தனகல்ல, மினுவாங்கொட, தம்புத்தேகம, அளுத்கம, மதுகம, அகலவத்த, அலவ்வ, பொல்கஹவெல, பொத்துஹெர ஆகிய பகுதிகளுக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் வசதியை வழங்குதல் | ரூபா **21.2** பில்லியன் |
| கிரிபாவ பகுதிக்கு குழாய் மூலம் நீர் வழங்கல் | ரூபா **1.0** பில்லியன் |
| நாடு முழுவதும் புதிய நீர் இணைப்புகளை வழங்குவதற்காக தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் திறனை விரிவுபடுத்துதல் | ரூபா **11.2** பில்லியன் |
| சுமார் 3,700 சமூக நீர் வழங்கல் திட்டங்களின் நிலைபெறு தன்மையை உறுதி செய்தல் | ரூபா **2.98** பில்லியன் |
| மக்களுக்கு நிலையான நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு அரச ஆதரவு | ரூபா **17.0** பில்லியன் |



ரூபா **44.8** பில்லியன்

மீண்டுவரும் - ரூபா 1.7 பில்லியன்

மூலதனம் - ரூபா 43.1 பில்லியன்

**வீடமைப்பு**

| | |
|---|---|
| கொழும்பு நகரம் மற்றும் அதன் அருகிலுள்ள புறநகர்ப் பகுதிகளில் உள்ள குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளை இடமாற்றம் செய்வதற்காக கட்டப்பட்ட மொத்த 50,000 வீட்டு அலகுகளில் மேலும் 3,000 வீட்டு அலகுகளை நிறைவு செய்தல் - ஸ்டேடியம் கம, பேர்கூசள், மாதம்பிட்டி, அப்பல்வத்தை, கொலம்பகே மாவத்தை, அருணோதய மாவத்தை) | ரூபா **15.0** பில்லியன் |
| ஏழ்மையான மற்றும் குறைந்த வருமானம் கொண்ட வீடற்ற குடும்பங்களுக்கான வீடு கட்டுவதற்கு ஆதரவளிக்கும் "தமக்கென ஓரிடம் அழகியதோர் வாழ்க்கை" வீடமைப்பு மானிய நிகழ்ச்சித் திட்டம் (7000 வீடுகளை அமைத்தல்) | ரூபா **7.2** பில்லியன் |
| கொழும்பில் உள்ள பல்வேறு புறநகர்ப் பகுதிகளில் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு நியாய விலையில் வீடுகளை வழங்குதல் | ரூபா **6.5** பில்லியன் |
| நாடு முழுவதும் உள்ள தோட்ட தொழிலாளர்களுக்கு சுமார் 2,500 புதிய வீட்டு அலகுகள் | ரூபா **5.65** பில்லியன் |
| மோதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக சுமார் 2,445 வீட்டு அலகுகளின் கட்டுமானத்தை நிறைவு செய்தல் | ரூபா **3.8** பில்லியன் |
| தே.வீ.அ.அ.ச ஆல் கட்டப்பட்ட பழைய வீட்டுத் திட்டங்களின் பொது வசதிகள் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை புதுப்பித்தல் | ரூபா **0.68** பில்லியன் |
| மண்சரிவு அச்சுறுத்தல்கள் மற்றும் மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தல் (மீதமாயுள்ள 2,272 வீடுகளின் கட்டுமாணப்பணியினை நிறைவு செய்தல்) | ரூபா **1.0** பில்லியன் |

**ரூபா 19.6 பில்லியன்**
**கிராமபுற அபிவிருத்தி**

| | |
|---|---|
| வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் கிராமப்புற வீதிகள், நடுத்தர மற்றும் சிறிய அளவிலான நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் வழங்கல் வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளின் அபிவிருத்தி | ரூபா 8.0 பில்லியன் |
| பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு பங்களிக்கும் வகையில் மாகாணங்களில் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துதல் (பிரமாண அடிப்படையிலான மானியங்கள்) | ரூபா 7.0 பில்லியன் |
| நாடளாவிய ரீதியில் சிறிய அளவிலான கட்டுமானங்கள், பழுதுபார்ப்பு மற்றும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள், பல்வேறு பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விநியோகம் மற்றும் வருமான உருவாக்கற் கருத்திட்டங்கள் (பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம்) | ரூபா 4.5 பில்லியன் |

**ரூபா 5.4 பில்லியன்**
மீண்டுவரும்- ரூபா 1.5 பில்லியன்
மூலதனம் – ரூபா 3.8 பில்லியன்
**நகர்புற பகுதிகளில் கட்டிட மேம்பாடு**

| | |
|---|---|
| 100 நகரங்களில் (சியக் நகர) நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நகர மேம்பாடு | ரூபா 0.93 பில்லியன் |
| யாழ்ப்பாண நகர மண்டபத்தை புனரமைத்தல் | ரூபா 0.22 பில்லியன் |
| மூலோபாய நகரங்களின் மேம்பாடு - அனுராதபுரம் | ரூபா 0.70 பில்லியன் |
| மூலோபாய நகரங்களின் மேம்பாடு - யாழ்ப்பாணம் | ரூபா 0.02 பில்லியன் |
| நிலபெறுதகு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் | ரூபா 1.47 பில்லியன் |
| வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒருங்கிணைந்த பிராந்திய அபிவிருத்தி | ரூபா 0.3 பில்லியன் |

**ரூபா 13.5 பில்லியன்**
மீண்டுவரும் – ரூபா 7.5 பில்லியன்
மூலதனம் – ரூபா 6.0 பில்லியன்
**இளைஞர் மற்றும் விளையாட்டு**

| | |
|---|---|
| மாகாண விளையாட்டு வளாகங்களை நிர்மாணித்தல் | ரூபா 0.15 பில்லியன் |
| மாவட்ட விளையாட்டு வளாகங்களை நிர்மாணித்தல் | ரூபா 0.22 பில்லியன் |
| கல்முனையில் விளையாட்டு மைதானத்தை நிறைவு செய்தல் | ரூபா 0.15 பில்லியன் |
| விளையாட்டு கலாச்சாரத்தை தாபித்தல் | ரூபா 1.8 பில்லியன் |

# பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

ரூபா
**0.35**
பில்லியன்

தேசிய அணிகளுக்கான ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்தல்



நாட்டின் உணவு
மற்றும் ஊட்டச்சத்து
பாதுகாப்பை
மேம்படுத்த
உற்பத்தித்திறன்
கொண்ட
நவீனமயப்படுத்திய
நிலைபேறான
விவசாயம்



# 2026 இற்கு ரூபா 267 பில்லியன்

**மீண்டெலும் செலவினம்**
ரூபா **102.6** பில்லியன்

**மூலதன செலவினம்**
ரூபா **164.0** பில்லியன்



ரூபா **135.5** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 70.7 பில்லியன்
மூலதனம் – ரூபா 64.8 பில்லியன்
**விவசாயத்துறை**



ரூபா **91.7** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 12.3 பில்லியன்
மூலதனம்– ரூபா 79.4 பில்லியன்
**நீர்ப்பாசனம்**



ரூபா **4.2** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 1.0 பில்லியன்
மூலதனம்– ரூபா 3.2 பில்லியன்
**கால்நடை**



ரூபா **11.6** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 6.0 பில்லியன்
மூலதனம்– ரூபா 5.6 பில்லியன்
**தோட்டத்தொழில்**



ரூபா **10.6** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 4.1 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.5 பில்லியன்
**மீன்பிடித்துறை**



ரூபா **13.0** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 8.5 பில்லியன்
மூலதனம்– ரூபா 4.5 பில்லியன்
**காணி**

## பிரதான செலவின செயற்பாடுகள்



ரூபா **135.5** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 70.7 பில்லியன்
மூலதனம் – ரூபா 64.8 பில்லியன்
**விவசாயத்துறை**

| | |
|---|---|
| காலநிலை சாதுர்யமான விவசாய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் பல்வகைப்படுத்தலை மேம்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளை புனரமைப்பு செய்தல், அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் பொதுவான சேமிப்பு, பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு அவசியமான சந்தை உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்/ புனரமைப்பு செய்தல் | ரூபா **4.0** பில்லியன் |
| வர்த்தக கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கும், நிதி அணுகலை வழங்குவதற்கும், தொழில்நுட்ப அறிவு மற்றும் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கும், விவசாயத்தில் இயந்திரமயமாக்கலை அறிமுகப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் கிராமப்புற சிறுபற்றுநில விவசாயிகளுக்கு வசதி செய்தல் | ரூபா **1.67** பில்லியன் |
| புத்தளம், குருநாகல், மாத்தளை, அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் சிறு பற்றுநில விவசாயிகளை ஆதரித்தல், காலநிலை மாற்றத்திற்கு அவர்களின் மீள்தன்மையை வலுப்படுத்துதல் மற்றும் செழிப்பான விவசாய வணிக முயற்சிகளை ஊக்குவித்தல் | ரூபா **9.3** பில்லியன் |
| யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, நுவரெலியா, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் விவசாய உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித்திறன், சந்தை அணுகல் மற்றும் காலநிலை மீள்தன்மையை அதிகரித்தல் | ரூபா **1.5** பில்லியன் |
| விவசாயிகளிடையே நல்ல தரமான விதைகளை கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் | ரூபா **1.2** பில்லியன் |
| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் தொடர்புடைய உட்கட்டமைப்பை பராமரித்தல், புனரமைத்தல் மற்றும் மாகாண அதிகாரிகளால் விவசாயத்திற்கான ஆதரவு | ரூபா**13.63** பில்லியன் |
| நெல் தாங்கு இருப்பைப் பேணுதல் | ரூபா **10.0** பில்லியன் |

| | | |
|---|---|---|
| கொங்கட்டியவிலிருந்து மாதேத்தாவ வரை சுமார் 27.7 கி.மீ நீளமுள்ள வடமத்திய மாகாண கால்வாயை நிர்மாணித்தல், மொரகஹகந்தவிலிருந்து கொங்கட்டிய வரையிலான கால்வாய் மற்றும் மடேத்தாவ முதல் கொடுருவேவா வரையிலான கால்வாயின் மீதமுள்ள நடவடிக்கைகளை முடித்தல், (மகாவேலி நீர் பாதுகாப்பு முதலீட்டு கருத்திட்டம் ii) | ரூபா **29.0** | பில்லியன் |
| குளங்கள் மற்றும் அணைகள் தொடர்பான நாடு முழுவதும் நீர்ப்பாசன உள்கட்டமைப்பை புனரமைத்தல், நீரேந்து பகுதிமுகாமை, நீரேந்துபகுதி மறுசீரமைப்பு (ஒருங்கிணைந்த நீரேந்துபகுதி மற்றும் நீர்வள முகாமை கருத்திட்டம்) | ரூபா **5.1** | பில்லியன் |
| மாத்தளை, கண்டி, குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் உள்ள சாலைகளில் கிராம குளங்கள், குளங்கள், நீர்ப்பாசன வலையமைப்புகள் மற்றும் காடுகள் மற்றும் ஓடையோர பாதுகாப்பு மற்றும் முகாமையை மறுசீரமைத்தல் மற்றும் நிறுவுதல் | ரூபா **3.2** | பில்லியன் |
| மாதுரு ஓயா வலது கரை மேம்பாட்டுத் திட்டம் | ரூபா **1.0** | பில்லியன் |
| நீர்ப்பாசனத் துறையின் கீழ் உள்ள அனைத்து நீர்ப்பாசனத் திட்டங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வது | ரூபா **2.2** | பில்லியன் |
| தீவு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அத்தியாவசிய புனரமைப்பு | ரூபா **6.5** | பில்லியன் |
| மல்வத்து ஓயா ஊடறுக்கும் நீர்த்தேக்கம் மற்றும் தொடர்புடைய உள்கட்டமைப்பு கட்டுமானம் | ரூபா **5.0** | பில்லியன் |
| சிறிய நீர்ப்பாசனம், கிராம குள அருவித்தொடர் அமைப்புகள் மற்றும் கைவிடப்பட்ட வயல் நிலங்களின் மேம்பாடு | ரூபா **3.0** | பில்லியன் |
| மகாவலி அதிகாரசபையின் கீழ் நாடு முழுவதும் பெரிய அணைகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் செயல்பாடு, புனரமைப்பு, பராமரிப்பு, விவசாய மற்றும் கிராமப்புற சாலை மேம்பாடு, விவசாய புத்தாக்கங்கள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் | ரூபா **3.6** | பில்லியன் |
| கிவுல் ஓயா நீர்த்தேக்க கட்டுமானம் | ரூபா **2.5** | பில்லியன் |
| எல்லேவெவ நீர்த்தேக்கம் | ரூபா **1.0** | பில்லியன் |



ரூபா **91.7** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 12.3 பில்லியன்
மூலதனம்– ரூபா 79.4 பில்லியன்
**நீர்ப்பாசனம்**



ரூபா **4.2** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 1.0 பில்லியன்
மூலதனம்– ரூபா 3.2 பில்லியன்
**கால்நடை**

| | | |
|---|---|---|
| ஆடு வளர்ப்புக்குத் தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் அடையாளம் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர ஆட்டுப் பண்ணைகளுக்கு மானிய விலையில் பண்ணை உள்ளீடுகளை வழங்குதல் | ரூபா **0.20** | பில்லியன் |
| பண்ணை வளர்ப்புக்குத் தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், விலங்கு பொருட்கள் (முட்டை மற்றும் கோழி) மற்றும் அலங்கார மீன்வளர்ப்பை ஊக்குவித்தல், வசதிசெய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல், - அடையாளம் காணப்பட்ட சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு மானிய விலையில் பண்ணை உள்ளீடுகளை வழங்குதல் | ரூபா **0.25** | பில்லியன் |
| உயர் மரபணு திறன் கொண்ட நல்ல தரமான விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் | ரூபா **0.1** | பில்லியன் |
| இலங்கை மகாவலி அதிகார சபையால் செயல்படுத்தப்படும் விவசாயம் மற்றும் கால்நடை நிகழ்ச்சித் திட்டம் | ரூபா **1.4** | பில்லியன் |
| பால் உற்பத்தி துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் | ரூபா **0.38** | பில்லியன் |

| | | |
|---|---|---|
| கந்தரை மீன்பிடி துறைமுகத்தின் கட்டுமானம் | ரூபா **1.36** | பில்லியன் |
| மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தி | ரூபா **0.22** | பில்லியன் |
| மீன்பிடித் தொழிலுக்கான துணை உபகரணங்களை வழங்குதல் | ரூபா **0.9** | பில்லியன் |
| அறுவடைக்குப் பிந்தைய இழப்பைக் குறைப்பதன் மூலம் வாழ்வாதாரத்தை அதிகரிப்பதற்காக சிறிய அளவிலான தரையிறங்கும் தளங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | ரூபா **0.5** | பில்லியன் |
| 15 துறைமுகங்களின் தற்போதைய மீன்பிடி உட்கட்டமைப்பை புதுப்பித்தல், புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | ரூபா **0.3** | பில்லியன் |
| வாழைச்சேனை துறைமுகத்தை புனரமைத்தல் | ரூபா **0.35** | பில்லியன் |
| காரைநகர் சி-நோர் படகுத் தளத்தை புனரமைத்தல் | ரூபா **0.35** | பில்லியன் |



ரூபா **10.6** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 4.1 பில்லியன்
மூலதனம்– ரூபா 6.5 பில்லியன்
**மீன்பிடித்துறை**

ரூபா **11.6** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 6.0 பில்லியன்
மூலதனம்– ரூபா 5.6 பில்லியன்
**தோட்டத்தொழில்**

| | |
|---|---|
| தேயிலை சிறுபற்றுநில அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உற்பத்தியை அதிகரித்தல், சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களின் நலனுக்காக பணியாற்றுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட மேம்பாட்டு நடவடிக்கைகள் | ரூபா **1.0** பில்லியன் |
| தேங்காய் உற்பத்தி மேம்பாடு மற்றும் வடக்கு தென்னை முக்கோண திட்டம் | ரூபா **0.6** பில்லியன் |

ரூபா **13.0** பில்லியன்
மீண்டுவரும் – ரூபா 8.5 பில்லியன்
மூலதனம்– ரூபா 4.5 பில்லியன்
**காணி**

| | |
|---|---|
| அரச தேவைகளுக்காக காணி கையகப்படுத்துதல் | ரூபா **2.66** பில்லியன் |
| பிம் சவிய நிகழ்ச்சித் திட்டம் | ரூபா **0.73** பில்லியன் |

## முக்கிய நலன்புரி நிகழ்ச்சிதிட்டம்



ரூபா **5.55** பில்லியன்
விவசாயிகளுக்கான ஓய்வூதியம்



ரூபா **36.9** பில்லியன்
இரசாயன மற்றும் சேதன பசளைக்கான உர மானியத் திட்டம்

* ரூபா **3.0** பில்லியன்
ஆறு பயிர்களுக்காக (நெல், சோளம், பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு மற்றும் சோயா அவரை) அரச அனுசரணையின் கீழ் விவசாயிகளுக்கு இலவசமாக செயல்படுத்தப்படும் கட்டாய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் நிர்வாகம்




ரூபா **1.1** பில்லியன்
ஏற்றுமதி பயிர் அபிவிருத்திக்காக விவசாயிகளுக்கு உதவுதல்



ரூபா **0.25** பில்லியன்
இலங்கை கறுவாத் தொழிலை புத்துயிர் பெறச்செய்வதற்காக விவசாயிகளுக்கு உதவுதல்



ரூபா **0.5** பில்லியன்
இறப்பருக்கான மானியம்



ரூபா **0.29** பில்லியன்
கைவிடப்பட்ட முதிர்ந்த இறப்பர் பயிர்நிலங்களில் மீண்டும் பயிரிடுதல்

* நில்வளா கங்கையின் வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட இழப்புக்களுக்காக நெல் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான ரூபா 1.2 பில்லியனை உள்ளடக்கியுள்ளது.

என்றும் பசுமையான
வாழ்க்கையை
நோக்கி



**2026 இற்கு ரூபா 53 பில்லியன்**

மீண்டெலும் செலவினம் ரூபா **14.47** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **38.98** பில்லியன்

ரூபா **1.0** பில்லியன்
கரையோர பாதுகாப்பு

ரூபா **14.75** பில்லியன்
அனர்த்த முகாமை

ரூபா **8.55** பில்லியன்
சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ரூபா **4.0** பில்லியன்
வெள்ள நீர் முகாமை

ரூபா **5.0** பில்லியன்
கழிவு முகாமை

ரூபா **6.4** பில்லியன்
வனசீவராசிகள் பாதுகாப்பு

ரூபா **13.7** பில்லியன்
கழிவுநீர் முகாமை

# பிரதான செலவின செயற்பாடுகள்

ரூபா **14.75** பில்லியன்
**அனர்த்த முகாமை**

| | |
|---|---|
| அனர்த்தங்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கான தணிப்புத் திட்டங்களை செயல்படுத்துதல் | ரூபா 0.50 பில்லியன் |
| வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்க கூடிய பொறிமுறையின் திறனை வலுப்படுத்துதல் | ரூபா 0.01 பில்லியன் |
| வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட பிதேசங்களின் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் | ரூபா 0.60 பில்லியன் |
| மண்சரிவு விசாரணைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | ரூபா 0.10 பில்லியன் |
| கிராமங்கள், பொது இடங்கள், பிரதான பாதைகள் மற்றும் மலையக ரயில் பாதையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மண்சரிவு பாதிப்படையும் 128 இடங்களில் உடனடித் தணிப்பு நடவடிக்கைகள் மூலம் மண்சரிவு பாதிப்பைக் குறைத்தல் | ரூபா 7.28 பில்லியன் |
| முன் எச்சரிக்கை தொழில்நுட்பம் | ரூபா 0.01 பில்லியன் |
| இலங்கையின் தேசிய கட்டிடக் குறியீட்டை உருவாக்குதல் மற்றும் நிறுவுதல் | ரூபா 0.07 பில்லியன் |
| டொப்ளர் வானிலை ரேடார் அமைப்புகள் | ரூபா 3.75 பில்லியன் |

ரூபா **6.4** பில்லியன்
**வனசீவராசிகள் பாதுகாப்பு**

| | |
|---|---|
| மனித யானை மோதலைத் தணிக்க சுமார் 5,000 கி.மீ நீளமுள்ள மின்சார வேலிகளைப் பராமரித்தல் | ரூபா 0.37 பில்லியன் |
| சுமார் 520 கி.மீ மின்சார வேலிகள் அமைத்தல் | ரூபா 0.30 பில்லியன் |
| வனசீவராசிகளுக்கான வாழ்விட வளப்படுத்தல் | ரூபா 0.08 பில்லியன் |



**ரூபா 8.55 பில்லியன்**
**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

| | |
|---|---|
| விவசாயம், வனவியல் மற்றும் பிற நில பயன்பாட்டுத் துறைகளுக்கான மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்யான கட்டமைப்பு | ரூபா 0.10 பில்லியன் |
| காலநிலை மாற்றத்தின் அதிகரித்த தாக்கங்களுக்கு எதிராக பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் தாங்கு திறனை வலுப்படுத்துதல் | ரூபா 0.11 பில்லியன் |
| விவசாயத் துறையில் POPs பூச்சிக்கொல்லிகளின் ஒருங்கிணைந்த முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக பாதுகாப்பான அகற்றல் மற்றும் சுகாதாரத் துறையில் பாதரசம் மற்றும் கழிவுகள் அகற்றல் | ரூபா 0.11 பில்லியன் |
| வனப் பரப்பை விரிவுபடுத்துதல் | ரூபா 1.0 பில்லியன் |
| காடுகளில் நிலையான சுற்றுச்சூழல் சுற்றுலா அபிவிருத்தி | ரூபா 0.06 பில்லியன் |
| பிளாஸ்டிக் கழிவுகளின் முகாமைத்துவம் | ரூபா 0.4 பில்லியன் |



**ரூபா 13.7 பில்லியன்**
**கழிவுநீர் முகாமை**

| | |
|---|---|
| கண்டி நகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கு கழிவுநீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் வசதிகளை வழங்குதல் | ரூபா 2.11 பில்லியன் |
| எல்ல நகரத்திற்கான கழிவு நீர் முகாமைத்துவ முறைமை | ரூபா 0.30 பில்லியன் |
| ரத்மலானை / மொரட்டுவ/ ஏகல கழிவு நீர் அகற்றும் கருத்திட்டம் (மொரட்டுவ மற்றும் ஏகல பகுதிகளுக்கு கழிவுநீர் குழாய் இணைப்பை விரிவுபடுத்துதல்) | ரூபா 2.14 பில்லியன் |
| கொழும்பு மாநகர சபையில் கழிவு நீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்துதல் | ரூபா 9.1 பில்லியன் |
| மலக் கழிவு முகாமை மேம்பாடு | ரூபா 0.01 பில்லியன் |

* இதற்கு மேலதிகமாக, வீட்டுவசதி (ரூபா 0.68 பில்லியன்) மற்றும் சுகாதாரம் (ரூபா 1.3 பில்லியன்) துறைகளின் கீழ் மருத்துவ கழிவு மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ கருத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன



**ரூபா 4.0 பில்லியன்**
**மழைநீர் முகாமை**

| | |
|---|---|
| வேரஸ் கங்கை, ஒலியமுல்ல மற்றும் கொலன்னாவ மழை நீர் வடிகால் மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக் கருத் திட்டம் | ரூபா 2.0 பில்லியன் |
| கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழை நீர் பம்பிங் நிலையத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு | ரூபா 0.16 பில்லியன் |
| தற்போதுள்ள கால்வாய்கள், ஏரிகள், ஈரநிலங்கள் மற்றும் நடைபாதைகளின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு | ரூபா 0.97 பில்லியன் |
| வடிகால் வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் | ரூபா 0.73 பில்லியன் |



**ரூபா 5.0 பில்லியன்**
**கழிவு முகாமை**

| | |
|---|---|
| அருவக்காலு, புத்தளம் ஆகியவற்றில் அதன் தொடர்புடைய கட்டமைப்புகளுடன். சுகாதார நிலப்பரப்பு | ரூபா 2.5 பில்லியன் |
| கெரவலப்பிட்டி கழிவு முகாமைத்துவ பூங்கா | ரூபா 0.21 பில்லியன் |
| அனுராதபுரம் மாநகர சபைப் பகுதியில் திடக்கழிவு அகற்றும் பொறிமுறையை செயல்படுத்துதல் | ரூபா 0.53 பில்லியன் |
| உள்ளூராட்சி அதிகார சபைப் பிரிவுகளில் திடக்கழிவு முகாமைத்துவத்தை ஆதரித்தல் | ரூபா 0.90 பில்லியன் |
| ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களில் நிலையான ஒருங்கிணைந்த கழிவு முகாமை மற்றும் சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்துதல் | ரூபா 0.80 பில்லியன் |



## பிரதான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்

வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**ரூபா 0.5 பில்லியன்**

# அமைதியான மற்றும் நியாயமான சமூகத்தை நோக்கிய அர்ப்பணிப்பு



# 2026 இற்கு ரூபா 307 பில்லியன்

**மீண்டெழும் செலவினம் ரூபா 258.6 பில்லியன்**

**மூலதன செலவினம் ரூபா 48.1 பில்லியன்**

| | மொத்தம் ரூபா பில்லியன் | மூலதனம் ரூபா பில்லியன் | மீண்டுவரும் ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| பொதுமக்கள் பாதுகாப்பு | 224.16 | 22.87 | 201.29 |
| சட்டம் மற்றும் ஒழுங்கு | 64.45 | 17.75 | 46.7 |
| கலாச்சாரம் மற்றும் சமயம் | 14.5 | 5.52 | 8.97 |
| ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல் | 1.22 | 0.05 | 1.17 |
| ஊடகம் | 2.32 | 2.27 | 0.05 |

## 2026 இல் செய்யப் போவது என்ன?

**ரூபா 224.16 பில்லியன்**
**பொது மக்கள் பாதுகாப்பு**

| | |
|---|---|
| குற்றவியல் மற்றும் போக்குவரத்துச் சட்டங்களை அமுல்படுத்துதல், பொது ஒழுங்கு மற்றும் பாதுகாப்பைப் பேணுதல் மற்றும் பொலீஸ் விசேட அதிரடிப் படை படை மூலம் நாடு முழுவதும் அமைதியைப் பேணுதல் | ரூபா 177.4 பில்லியன் |
| வெற்று பயண ஆவணங்கள் (வெற்று கடவுச்சீட்டு) மற்றும் தொடர்புடைய விநியோகங்களை வழங்குதல் | ரூபா 4.0 பில்லியன் |
| வலுவான, உள்ளடக்கிய மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் அடையாள அமைப்பை நிறுவுதல் | ரூபா 2.0 பில்லியன் |
| முன் அச்சிடப்பட்ட அட்டைகள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள் | ரூபா 1.9 பில்லியன் |

**ரூபா 64.45 பில்லியன்**
**சட்டம் மற்றும் ஒழுங்கு**

| | |
|---|---|
| கம்பஹா, கடுவெல, வெலிமட, காலி, இரத்தினபுரி, அனுராதபுரம், மாத்தளை, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, கிளிநொச்சி, தெல்தெனிய, பூகோட மற்றும் கந்தளாய் உள்ளிட்ட நீதிமன்ற கட்டிடத்தொகுதிகளின் அபிவிருத்தி | ரூபா 1.9 பில்லியன் |
| நீதித்துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மூன்று ஆண்டு திட்டம் | ரூபா 1.3 பில்லியன் |
| மாகாண சபைகளின் கீழ் நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் தொடர்பான சொத்துக்களைப் பராமரித்தல் | ரூபா 2.3 பில்லியன் |
| நீதி இல்லம் | ரூபா 3.0 பில்லியன் |
| அனைத்து வசதிகளையும் வழங்குவதன் மூலம் நாட்டின் சிறைச்சாலை அமைப்பை செயற்படுத்துதல் | ரூபா 22.4 பில்லியன் |
| - களுத்துறை, வட்டரக மற்றும் பல்லேகலை சிறைச்சாலைகளின் கட்டுமானம் | ரூபா 0.74 பில்லியன் |
| - அதில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் | ரூபா 0.35 பில்லியன் |
| *இழப்பீட்டு அலுவலகம் | ரூபா 0.7 பில்லியன் |
| நிறுவன பராமரிப்பு, பாதுகாவலர் ஆகியவற்றின் கீழ் உள்ள குழந்தைகள் மற்றும் தெருவோரக் குழந்தைகளுக்கான வாழ்க்கைப் படி | ரூபா 0.75 பில்லியன் |

ரூபா **14.5** பில்லியன்
**சட்டம் மற்றும் ஒழுங்கு**

| | |
|---|---|
| இலங்கை தினம் | ரூபா 0.35 பில்லியன் |
| அருங்காட்சியகங்களைப் பராமரித்தல் மற்றும் குடிமக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல் | ரூபா 0.75 பில்லியன் |
| தொல்பொருள் சேவைகள் | ரூபா 2.6 பில்லியன் |
| சுவடிகள் முகாமைத்துவம் | ரூபா 1.6 பில்லியன் |
| தேசிய கலை விழா மற்றும் கலாச்சார மேம்பாடு | ரூபா 0.1 பில்லியன் |
| மத ஸ்தலங்களுக்கு சூரிய சக்தி வசதிகளை வழங்குதல் | ரூபா 1.2 பில்லியன் |
| கிராமப்புற பௌத்த விகாரைகளின் மேம்பாடு | ரூபா 0.1 பில்லியன் |
| ஜோன் டி சில்வா அரங்கத்தைப் புதுப்பித்தல் | ரூபா 0.2 பில்லியன் |

ரூபா **2.32** பில்லியன்
**ஊடகம்**

| | |
|---|---|
| புவிசார் தொலைக்காட்சி ஒளிபரப்பு திட்டத்தின் டிஜிட்டல் மயமாக்கல் | ரூபா 1.2 பில்லியன் |



# தேசிய
# பாதுகாப்பு



**2026**
**இற்கு ரூபா**
**407**
**பில்லியன்**

மீண்டெழும் செலவினம்
ரூபா **361.6** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **45.3** பில்லியன்

## 2026 இல் செய்யப் போவது என்ன?

ரூபா **407** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 361.6 பில்லியன்
மூலதனம்– ரூபா 45.3 பில்லியன்

| | |
|---|---|
| அக்குரகொடெவில் பாதுகாப்பு தலைமையக கட்டிடநிர்மாணம் | ரூபா **4.2** பில்லியன் |
| முப்படைகளின் உணவு மற்றும் நிவாரணம் | ரூபா **75.5** பில்லியன் |
| முப்படைகளுக்கான சீருடைகள் | ரூபா **6.1** பில்லியன் |
| முப்படைகளின் சம்பளம் மற்றும் படிகள் | ரூபா**223.0** பில்லியன் |

## பிரதான புனரமைப்புகள் மற்றும் மேம்பாடுகள்



இலங்கை கடற்படை
ரூபா **10.5** பில்லியன்



இலங்கை இராணுவம்
ரூபா **1.8** பில்லியன்



இலங்கை வான்படை
ரூபா **16.8** பில்லியன்

## பிரதான நலன்புரித்திட்டங்கள்

ரூபா
**1.70**
பில்லியன்



ரணவிரு மாபிய ரெகவரண நிகழ்ச்சித் திட்டம்



ரூபா
**0.02**
பில்லியன்

போர் வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வை மேம்படுத்துதல்

# பொருளாதார சேவைகளும் தொழில்முனைவும்



# 2026 இற்கு ரூபா 120 பில்லியன்

**மீண்டெலும் செலவினம் ரூபா 46.7 பில்லியன்**

**மூலதன செலவினம் ரூபா 73.4 பில்லியன்**

| | மொத்தம் ரூபா பில்லியன் | மூலதனம் ரூபா பில்லியன் | மீண்டுவரும் ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| முதலீடுகள் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றுக்கான வசதியளிப்பு | 19.2 | 13.0 | 6.2 |
| சிறு நடுத்தரதொழில் முயற்சிகளின் அபிவிருத்தி | 55.7 | 53.4 | 2.3 |
| தொழில் | 7.6 | 1.2 | 6.3 |
| தபால் சேவைகள் | 29.5 | 1.8 | 27.7 |
| சுற்றுலா வசதியளிப்பு | 5.1 | 3.1 | 2.0 |
| வர்த்தக வசதியளிப்பு | 2.7 | 0.7 | 2.0 |

## ரூபா 29.5 பில்லியன் தபால் சேவைகள்

| | |
|---|---|
| நாடு பூராகவும் தபால் சேவைகளை வழங்குதல் | ரூபா 29.5 பில்லியன் |

## ரூபா 2.7 பில்லியன் வர்த்தக வசதியளிப்பு

| | |
|---|---|
| விநியோக சங்கிலி முகாமைத்துவத்திற்கான உற்பத்தி கூட்டுறவு சங்க முறைமை | ரூபா 0.1 பில்லியன் |
| தற்போது காணப்படும் நெற் Wயங்ளைப் புதுப்பித்தல் | ரூபா 0.2 பில்லியன் |
| நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் | ரூபா 0.62 பில்லியன் |

## ரூபா 5.1 பில்லியன் சுற்றுலா வசதியளிப்பு

| | |
|---|---|
| சுற்றுலா மேம்பாடு / நகர வியாபாரநாமம் | ரூபா 1.3 பில்லியன் |
| யாழ் மாவட்டத்தில் சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்தி | ரூபா 0.13 பில்லியன் |
| அறுகம்பேயில் சூரிய அஸ்தமனக் காட்சிப் பூங்கா | ரூபா 0.07 பில்லியன் |
| உள்ளூராட்சி அதிகாரபைப் பிரிவுகளில் சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்தி | ரூபா 0.2 பில்லியன் |
| விலங்கியல் மற்றும் தாவரவியல் பூங்காக்களின் செயற்பாடு மற்றும் முகாமைத்துவம் | ரூபா 2.3 பில்லியன் |
| சுற்றுலாத் தளங்களின் அபிவிருத்தி | ரூபா 0.8 பில்லியன் |

## ரூபா 19.2 பில்லியன் கைத்தொழில் ஊக்குவிப்பு

| | |
|---|---|
| தற்போதுள்ள 33 கைத்தொழில் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | ரூபா 4.0 பில்லியன் |
| கொழும்பு துறைமுக நகர எல்லைக்குள் குழாய் நீர் மற்றும் கழிவு நீர் உள்ளிட்ட பயன்பாட்டு வசதிகளை வழங்குதல் | ரூபா 1.3 பில்லியன் |
| ஆய்வு முடிவுகளை வர்த்தக மயமாக்கல் | ரூபா 1.2 பில்லியன் |
| முதலீட்டு நேய சூழலை உருவாக்குதல் | ரூபா 2.0 பில்லியன் |
| வெளிநாட்டு முதலீட்டாளர்ளை ஈர்க்க புதிய பொருளாதார வலயங்களை நிறுவுதல் | ரூபா 1.4 பில்லியன் |




நீங்கள் ஒருதொழில் முயற்சியாண்மையாளரா?, அல்லது ஒரு வியாபாரம் பற்றி சிந்திப்பவரா?




சுமார் ரூபா
**50**
பில்லியன்

# அரசாங்கம் உங்களுக்கு உதவிசெய்யத் தயார்



## புதிய விரிவான கிராமிய கடன் திட்டம்

| | |
|---|---|
| யாருக்காக | - நுண் மற்றும் சிறு பற்றுநில விவசாயிகள் |
| எதற்காக | - குறுகிய கால பயிர்களை பயிரிடுவதற்கும், (34 பயிர்கள்) அவைகளின் வளர்ப்பிற்கும்,வீட்டுத் தோட்டம் மற்றும் களஞ்சியம் ஆகியவற்றுக்கும் நுண் மற்றும் சிறு பற்றுநில விவசாயிகளின் குறைந்த செலவின மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு. |
| அதிகபட்ச கடன் தொகை | - ரூபா 3 மில்லியன் |
| வட்டி | - கடன் வட்டிக்கான 5% மானியம் (செயல்பாட்டு விகிதம் 11%) |
| செயற்படுத்துதல் | - உரிமம் பெற்ற வங்கிகள் (13 வங்கிகள்) மூலம் செயல்படுத்துதல் |
| முதல் தொடர்பு புள்ளி | - தொடர்புடைய வங்கிகள் |

**2026 இற்கு ரூபா 1.8 பில்லியன்**

## சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை மேம்படுத்தும் நிதியியல் கருத்திட்டம் (சுழற்சி)

**2026 இற்கு ரூபா 5.9 பில்லியன்**

| | |
|---|---|
| யாருக்காக | - வர்த்தகம், குத்தகை மற்றும் வாடகை வியாபாரங்களைத் தவிர அனைத்து துறைகளும் |
| எதற்காக | – முதலீடு/செயல்படும் மூலதனம்/ ஒருங்கிணைந்த கடன்கள் |
| கடன் தொகை | - அதிகபட்சம் ரூ. 50.0 மில்லியன் |
| செயல்படுத்துதல் | - உரிமம் பெற்ற 13 வங்கிகள் (அரசு மற்றும் தனியார்) மூலம் |
| வட்டி விகிதம் | - 2 ஆண்டுகள் சலுகை காலம் உட்பட 10 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 8% அதிகபட்ச வட்டி |
| ஆரம்ப தொடர்பு மையம் | – தொடர்புடைய வங்கிகள் |



## நுண், சிறிய மற்றும் நடுத்தர (MSME)தொழில் முயற்சிகளை மீள் வலுப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு கடன் திட்டம்

**2026 இற்கு ரூபா 25 பில்லியன்**

யாருக்காக – நுண், சிறிய மற்றும் நடுத்தர (MSME)தொழில் முயற்சிகள்

எதற்காக – உற்பத்தி, கட்டுமானம், ஏற்றுமதி சார்ந்த, ஆடை, விவசாயம் மற்றும் விவசாய அடிப்படை சார்ந்த துறைகள் மற்றும் பெண்கள் தலைமையிலான எந்தவொரு தொழில் முயற்சிகளிலும் (MSME) உள்ள தொடக்க நிறுவனங்கள் மற்றும் தற்போதுள்ள தொழில் முயற்சிகள் (MSME) ஆகியவற்றை வலுப்படுத்துதல்

முதலீடு அல்லது செயல்பாட்டு மூலதனக் கடன்

- செயல்படும் கடன் வகை (கடன் திருப்பிச் செலுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லாத (MSME) தொழில் முயற்சிகள் முதலீட்டு மற்றும் செயற்படு மூலதனக் கடன்களுக்கு 10 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 7% அதிகபட்ச வட்டி
- செயல்படாத வகை – (கடன் திருப்பிச் செலுத்துவதில் சிக்கல்கள் உள்ள (MSME) தொழில் முயற்சிகள்)

வட்டி மற்றும் மீளச்செலுத்தல் – செயல்படும் மூலதனக் கடன்களுக்கு 5 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 8% அதிகபட்ச வட்டி விகிதம்

செயல்படுத்துதல் – உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் (அரச மற்றும் தனியார்)

ஆரம்ப தொடர்பு மையம் – பிரதேச செயலக அலுவலகங்களில் பணியாற்றும் தொழில்துறை அமைச்சின் கள அதிகாரிகள்









## விவசாய பெறுமானச் சங்கிலி நிதியுதவி மற்றும் வணிக மயமாக்கல் துறை மேம்பாடு கருத்திட்டம்

**2026 இற்கு ரூபா 6.2 பில்லியன்**

யாருக்காக – சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs), கூட்டுறவு நிறுவனங்கள், மற்றும் விவசாய பெறுமான சங்கிலியில் ஈடுபட்டுள்ள விவசாய தொடக்க நிறுவனங்கள்

எதற்காக – காலநிலை தாங்குதிறன் மற்றும் உள்ளடக்கத்தை ஒருங்கிணைத்து, அணுகக்கூடிய, நியாய விலையில், மற்றும் இலக்கு வைக்கப்பட்ட நிதி தயாரிப்புகளை மேம்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன், பெறுமதி சேர்த்தல் மற்றும் சந்தை அணுகலை வழங்குவதற்கு.




## SME துறையை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (MSME-க்களுக்கு வலுவான மற்றும் உள்ளடக்கிய சூழலை உருவாக்குதல்)

யாருக்காக – நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்

எதற்காக – நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி துறையின் அபிவிருத்தி

கிடைக்கும் நன்மை – நிதி சார்பான பொறிமுறையை அறிமுகப்படுத்தல், மதிப்பீடு முறைமை, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக்களை இலக்காகக் கொண்ட கடன்வரி மற்றும் தொழில் முயற்சி மூலதன நிதியம்

**2026 இற்கு ரூபா 7.7 பில்லியன்**

## சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கான நெல் கொள்வனவு செய்வதற்கான உறுதிமொழி கடன் திட்டம்




**2026 இற்கு ரூபா 0.25 பில்லியன்**

| | | |
|---|---|---|
| யாருக்காக | – | ஒரு நாளைக்கு 25 மெட்ரிக் தொன் அரைக்கும் திறன் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலைகள் உரிமையாளர்கள் |
| எதற்காக | – | நெல் கொள்வனவு செய்வதற்கு |
| கடன்தொகை | – | ஒரு கடனாளிக்கு ரூ. 50 மில்லியன் |
| செயல்படுத்துதல் | – | உரிமம் பெற்ற வங்கிகள் மூலம் |
| திருப்பிச் செலுத்துதல் | - | அதிகபட்சம் 6 மாதங்கள் |
| வட்டி | - | வட்டிக்கு 4% மானியம் |
| தொடர்பு மையம் | – | தொடர்புடைய வங்கிகள் |




## விவசாயத் துறையில் உள்ள இளைஞர் தொழில்முனைவோர் அபிவிருத்தி திட்டம்

| | | |
|---|---|---|
| யாருக்காக | – | 18 -50 வயது எல்லையுடன் விவசாயத் துறையில் உள்ள இளைஞர் தொழில் முனைவோர் |
| எதற்காக | – | விவசாயம் மற்றும் விவசாயம் தொடர்பான தொழில்களில் உள்ள தொழில்முனைவோரை மேம்படுத்துதல் |
| கடன்தொகை | – | ரூபா 5 மில்லியன் |
| வட்டி விகிதம் மற்றும் திருப்பிச் செலுத்துதல் | – | 6 மாத சலுகைக் காலம் உள்ளிட்ட 5 வருட திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 4% வட்டி வீதம் |
| செயற்படுத்துதல் | - | இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் மூலம் |
| தொடர்பு மையம் | - | பிரதேச செயலக அலுவலகங்கள் |

**2026 இற்கு ரூபா 0.75 பில்லியன்**

## இளைஞர்களுக்கான தனிநபர் கடன் திட்டம்

**2026 இற்கு ரூபா 0.8 பில்லியன்**

| | | |
|---|---|---|
| யாருக்காக | – | 18-50 வயது எல்லையுடன் விவசாய பெறுமானச் சங்கிலியுடன் தொடர்புடைய இளைஞர் தொழில்முனைவோர் |
| எதற்காக | – | விவசாய பெறுமானச் சங்கிலியுடன் தொடர்புடைய எந்தவொரு விவசாய வணிகத் திட்டமும் |
| கடன் தொகை | – | அதிகபட்சம் ரூபா 2 மில்லியன் |
| வட்டி விகிதம் மற்றும் திருப்பிச் செலுத்துதல் | – | 5 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலத்துடன் 6.5% |
| செயற்படுத்துதல் | – | வணிக வங்கிகள் மூலம் செயல்படுத்துதல் |
| தொடர்பு மையம் | – | கமத்தொழில் அமைச்சு |







## சுயதொழில் ஊக்குவிப்பு முயற்சி கடன் திட்டம்

| | | |
|---|---|---|
| யாருக்காக | – | தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் (NVQ சான்றிதழ் மற்றும் "தொழில்முனைவோர் அபிவிருத்தி" என்ற 8 நாட்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற பிறகு வழங்கப்பட்ட சான்றிதழ் பெற்றவர்கள்) |
| எதற்காக | – | எந்த ஒரு சுயதொழில் முயற்சியையும் ஆரம்பிக்க |
| கடன் தொகை | – | ரூபா 1.0 மில்லியன் |
| வட்டி விகிதம் மற்றும் திருப்பிச் செலுத்துதல் | – | 7% வட்டி மற்றும் 5 ஆண்டுகள் திருப்பிச் செலுத்தும் காலம் |
| செயற்படுத்துதல் | – | வணிக வங்கிகள் மூலம் |
| தொடர்பு மையம் | – | தொழில் பயிற்சி நிறுவனங்கள்/ வங்கிகள் |

**2026 இற்கு ரூபா 0.30 பில்லியன்**

## தொழில்முனைவு அபிவிருத்தி ஊடாக மகளிரை வலுப்படுத்தல்

**2026**
இற்கு ரூபா
**0.24**
பில்லியன்

| | | |
|---|---|---|
| யாருக்காக | – | குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், மகளிர் செயற்பாட்டு சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்து, அந்த சங்கங்களால் வழங்கப்படும் தொழில்முனைவு தொடர்பான பயிற்சி பெற்றவர்கள். |
| எதற்காக | – | எந்த ஒரு சுயதொழில் முயற்சியையும் ஆரம்பிப்பதற்கு |
| கடன் தொகை | – | ரூபா 100,000 |
| வட்டி விகிதம் மற்றும் திருப்பிச் செலுத்துதல் | – | முழுவதும் மானியம் |
| தொடர்பு மையம் | – | பிரதேச செயலக அலுவலகங்களில் உள்ள மகளிர் அபிவிருத்தி உத்தயோகத்தர்கள் |



### சமூக பாதுகாப்புக் கருத்திட்டம் - ரூபா 1.1 பில்லியன்

### அஸ்வெசும பயனாளிகளை வலுப்படுத்துதல் - ரூபா 3.7 பில்லியன்

அஸ்வெசும பயனாளிகளை வலுப்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட அஸ்வெசும குடும்பங்களுக்கான குடும்ப அபிவிருத்தி திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் தொழில் பயிற்சிகளை வழங்குதல், வியாபார திட்ட அபிவிருத்திக்கு ஆதரவு மற்றும் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு நிதி உதவி



### ஏனைய உதவித் திட்டங்கள்

கிராமங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் அந்நோக்கத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு (தேசிய கிராம வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்)

ரூபா **2.0** பில்லியன்

குறைந்த வருமானம் கொண்ட மாற்றுத் திறனாளர்களுக்கான ஆதரவு

ரூபா **0.1** பில்லியன்

## வரையறுக்கப்பட்ட தேசிய கடன் உத்தரவாத நிறுவனம்

இந்நிறுவனமானது கருத்திட்டத்தின் தன்மையின் அடிப்படையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு பிணையமல்லாத கடன்களை வழங்குவதற்கு அவர்களை வலுப்படுத்துவதற்காக பங்குடமை நிதியியல் நிறுவனங்களுக்கு பகுதியளவான நாணய உத்தரவாதங்களை வழங்குவதற்கு தாபிக்கப்பட்டதாகும்.





# நிலையான மற்றும் பாதுகாப்பான எரிசக்தி விநியோகம்



# 2026 இற்கு ரூபா 23 பில்லியன்

மீண்டெலும் செலவினம் ரூபா **1.1** பில்லியன்

மூலதன செலவினம் ரூபா **22** பில்லியன்

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவித்தல்
- எரிசக்தி விரயத்தைக் குறைக்க மின் கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல்
- விலை உயர்வான எரிசக்தி வளங்களைச் சார்ந்திருப்பதைக் குறைத்தல்
- தனியார் துறை பங்கேற்பு மற்றும் முதலீடுகளை மேம்படுத்துதல்

## 2026 இற்கான திட்டம்



ரூபா **23** பில்லியன்
மீண்டுவரும்– ரூபா 1.1 பில்லியன்
மூலதனம்– ரூபா 22.0 பில்லியன்

| | |
|---|---|
| பாரிய கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் அமைந்துள்ள தேசிய கொண்டு செல்லல் மற்றும் பகிர்ந்தளிக்கும் வலையமைப்பின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் கொண்டு செல்லல் வழித்தடங்கள், உபநிலையங்கள் மற்றும் பகிர்ந்தளித்தல் வழித்தடங்களை கட்டமைத்தல் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் கொண்டு செல்லலின் போதான இழப்பைக் குறைத்தல் | ரூபா **7.6** பில்லியன் |
| கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்தல் | ரூபா **1.1** பில்லியன் |
| கெரவலப்பிட்டி - துறைமுகம் 2வது மின்பரிமாற்ற பாதை கருத்திட்டம் | ரூபா **5.4** பில்லியன் |
| புதிய ஹபரணை கப்பல்துறை மின்பரிமாற்ற அபிவிருத்தி கருத்திட்டம் | ரூபா **1.94** பில்லியன் |
| சம்பூர் கப்பல்துறை மின்பரிமாற்ற அபிவிருத்தி கருத்திட்டம் | ரூபா **1.5** பில்லியன் |
| புதிய ஹபரணையில் 75MWA ஒத்திசைவான மின்தேக்கி அலகு நிறுவுதல் | ரூபா **1.8** பில்லியன் |
| கூரை மேல் சூரிய மின்னுற்பத்தி மற்றும் மெய்நிகர் நிகர அளவீட்டுக் கருத்திட்டம் | ரூபா **1.0** பில்லியன் |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேர்க்கை மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கான மானிய உதவியினைப் பெறுதல் | ரூபா **0.60** பில்லியன் |
| மின்சாரத் துறை சீர்திருத்தங்களுக்கான செயலகத்தை நிறுவுதல் | ரூபா **0.07** பில்லியன் |

### பிற நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் புதுப்பிக்கத்தக்க திட்டங்கள்

| | |
|---|---|
| தெற்கு கடற்படைப் பகுதியில் சூரிய சக்தி (PV) அமைப்பை நிறுவுதல் | ரூபா **0.15** பில்லியன் |
| அக்குரேகோடாவில் உள்ள பாதுகாப்புத் தலைமையக (DHQC) திட்டத்தின் தொகுதி இலக்கம் 03 இல் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுதல் | ரூபா **0.12** பில்லியன் |
| சமய ஸ்தலங்களுக்கான சூரிய வசதி | ரூபா **1.2** பில்லியன் |
| வைத்தியசாலைகளில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியைப் பயன்படுத்தி மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்தும் திட்டம் | ரூபா **1.0** பில்லியன் |

மக்கள் நட்பு
அரச சேவைகள்



**2026**
**இற்கு ரூபா**
**411** *
**பில்லியன்**

மீண்டெழும் செலவினம்
ரூபா **261.6** பில்லியன்

மூலதன செலவினம்
ரூபா **149.5** பில்லியன்

*
1. வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் தவிர்ந்த

| | மொத்தம் ரூபா பில்லியன் | மூலதனம் ரூபா பில்லியன் | மீண்டுவரும் ரூபா பில்லியன் |
|---|---|---|---|
| மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் பொது சேவை வழங்கல் | 82.41 | 14.74 | 67.67 |
| சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள் | 6.65 | 0.15 | 6.49 |
| நிறைவேற்று மற்றும் சட்டவாக்கம் | 18.13 | 2.57 | 15.56 |
| நிதி விவகாரங்கள் | 167.3 | 90.0 | 77.3 |
| வெளி விவகாரங்கள் | 20.56 | 0.89 | 19.67 |
| மாகாண சபைகள் மூலம் பொது சேவை வழங்கல் | 93.24 | 29.49 | 66.75 |
| அரசு அச்சகம் மற்றும் வெளியீட்டு நடவடிக்கைகள் | 6.88 | 2.26 | 4.61 |
| அரசு சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் | 9.71 | 6.15 | 3.55 |
| கிளீன் ஸ்ரீ லங்கா | 6.5 | 6.5 | 0 |

# பிரதான செலவின நடவடிக்கைகள்



ரூபா **82.41** பில்லியன்
மாவட்ட நிர்வாகம் ஊடாக பொதுச்சேவை வழங்கல்

| | |
|---|---|
| பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்கள் மூலம் சேவைகளை வழங்குதல் | ரூபா **53.43** பில்லியன் |
| அடிமட்ட அளவில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான e-கிராம அலுவலர் கருத்திட்டம் | ரூபா **0.59** பில்லியன் |
| பிரதேச மற்றும் மாவட்ட செயலகங்களின் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடுகள் | ரூபா **8.74** பில்லியன் |

## கிளீன் சிறீலங்கா - மாற்றம், ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஆகியவற்றின் முயற்சிகளின் நாடு தழுவிய முயற்சிகளை மீளமைத்தல்

- ரூபா **6.5** பில்லியன்

### ரூபா 93.24 பில்லியன் மாகாண நிர்வாகம் ஊடாக பொதுச்சேவை வழங்கல்

| | |
|---|---|
| உள்ளூராட்சி அதிகாரசபைகளை வலுப்படுத்துதல் | ரூபா **1.20** பில்லியன் |
| உள்ளூராட்சி அதிகார சபைகளை உள்கட்டமைப்பு மற்றும் வருமான உருவாக்கத்தை மேம்படுத்துதல் | ரூபா **1.35** பில்லியன் |
| மாகாண சபைகளின் பராமரிப்பு தொடர்பான நடவடிக்கைகள் (பாதை,சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயம் தவிர்ந்தது) | ரூபா **26.9** பில்லியன் |
| கிழக்கு மாகாணத்திற்கான பல்துறை மானிய உதவியை செயல்படுத்துதல் | ரூபா **1.15** பில்லியன் |
| பாரம்பரியம், மீள்தன்மை, உள்ளடக்கம் மற்றும் பெறுமதி சார்ந்த வேலைவாய்ப்புக்கான சுற்றுலாத்துறை | ரூபா **0.30** பில்லியன் |
| ஒருங்கிணைந்த பிராந்திய மேம்பாட்டுத் திட்டம் | ரூபா **0.20** பில்லியன் |

### ரூபா 167.3 பில்லியன் நிதி விவகாரங்கள்

| | |
|---|---|
| புதிய கொள்கலன் ஸ்கேனிங் கருத் திட்டம் | ரூபா **4.76** பில்லியன் |
| நிதித் துறை பாதுகாப்பு வலை வலுப்படுத்துதல் கருத் திட்டம் (FSSNP) | ரூபா **3.18** பில்லியன் |
| தேசிய ஒற்றைச் சாளர கருத் திட்டம் (NSWP) | ரூபா **2.5** பில்லியன் |
| அரச நிறுவனங்களில் e - கொள்முதல் முறைகளைச் செயற்படுத்துதல் | ரூபா **0.4** பில்லியன் |

### ரூபா 20.56 பில்லியன் வெளிவிவகாரங்கள்

| | |
|---|---|
| வெளிநாட்டு தூதரக நடவடிக்கைகள் | ரூபா **17.71** பில்லியன் |

### ரூபா 9.71 பில்லியன் டிஜிட்டல் மயமாக்கல்

| | |
|---|---|
| இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளக் கருத் திட்டத்தின் (SL-UDI) ஒருங்கிணைப்பு | ரூபா **2.2** பில்லியன் |
| டிஜிட்டல் பொருளாதார முன்னேற்றம் | ரூபா **5.39** பில்லியன் |


### ரூபா 6.65 பில்லியன் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்

| | |
|---|---|
| வாக்காளர் பதிவு மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள் | ரூபா **0.29** பில்லியன் |
| தேர்தல்களை நடத்துதல் | ரூபா **5.0** பில்லியன் |

### ரூபா 18.13 பில்லியன் நிறைவேற்று மற்றும் சட்டவாக்கம்


| | |
|---|---|
| நிறைவேற்று மற்றும் சட்டவாக்கம் அபிவிருத்தி முயற்சிகள், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு | ரூபா **0.78** பில்லியன் |
| இலங்கை பொது நிதி மகாமைத்துவத்தை வலுப்படுத்தும் திட்டம் | ரூபா **0.37** பில்லியன் |

# தொழில் வாரியாக அரசதுறைப் பதவியணி





* வகைப்படுத்தப்படாத அரச பணியாளர்களைக் கொண்டுள்ளது.

# அரச துறைவேதனம் மற்றும் ஓய்வூதியம்




# அரச துறை வேதனங்கள்



# அனைவருக்குமான
# சமூகப்
# பாதுகாப்பு
# முறைமை



**2026 இற்கு ரூபா 837 பில்லியன்**

**மீண்டெழும் செலவினம் ரூபா 835.4 பில்லியன்**

**மூலதன செலவினம் ரூபா 1.5 பில்லியன்**

### அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டம் – ரூபா 231 பில்லியன் *

| | |
|---|---|
| குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு பண உதவி | ரூபா **151.3** பில்லியன் |
| குறைந்த வருமானம் கொண்ட அங்கவீனமுற்றோருக்கான ஆதரவு | ரூபா **19.0** பில்லியன் |
| முதியோருக்கான நிதி உதவி (70 வயதுக்கு மேற்பட்டவர்கள்) | ரூபா **54.3** பில்லியன் |
| முதியோருக்கான நிதி உதவி (100 வயதுக்கு மேற்பட்டவர்கள்) | ரூபா **0.03** பில்லியன் |
| சிறுநீரக நோயாளிகளுக்கு நிதி உதவி | ரூபா **6.4** பில்லியன் |

* பாடசாலை காகிதாதிகளை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவி தவிர்ந்த

### ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை - ரூபா. 565.0 பில்லியன்

| | |
|---|---|
| அரச அதிகாரிகளுக்கான ஓய்வூதியம் (745,000 ஓய்வூதியதாரர்கள்) | ரூபா **372.0** பில்லியன் |
| விதவைகள், தபுதாரர்கள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியம் அரச அதிகாரிகளுக்கு | ரூபா **78.0** பில்லியன் |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | ரூபா **60.0** பில்லியன் |
| இறந்த மற்றும் காயமடைந்த வீரர்களுக்கான சேவை இழப்பீடு | ரூபா **55.0** பில்லியன் |

### ஏனைய நலன்புரி நன்மைகள் - ரூபா 10.65 பில்லியன்

| | |
|---|---|
| சிரேஷ்ட பிரஜைகளின் வங்கிக் கணக்குகள் மீதான வட்டி வேறுபாடு | ரூபா **10.0** பில்லியன் |
| ஓய்வூதியதாரர்களுக்கான புகையிரத ஆணைச் சீட்டுக்கள் | ரூபா **0.65** பில்லியன் |

## பிரதான நலன்புரித்திட்டங்கள்



ரூபா 0.35 பில்லியன்

பகல்நேர பராமரிப்பு நிலைய அபிவிருத்தி



ரூபா 0.50 பில்லியன்

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் கீழ் பயன்களைப் பெறும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு மானியங்கள் மற்றும் பயிற்சி வழங்குதல்



ரூபா 0.085 பில்லியன்

அங்கவீனமுற்றோருக்கான அடையாள முறைமை




ரூபா 0.2 பில்லியன்

கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி மூலம் மீள்தன்மையையும் உள்ளடக்கிய மீட்சிக்கான வாய்ப்பையும் ஊக்குவித்தல் ,தனியார் துறை மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வளர்ச்சிக்கு ஆதரவான சூழலை ஏற்படுத்துதல்

# 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தின் பொதுவான விடயங்கள்

# ஒரு டிஜிட்டல் அரசு - டிஜிட்டல் மயமாக்கல்

தொழில் செயல்முறைகள் சேவைகள் அல்லது ஆளுகை என்பவற்றை நிலைமாற்றுவதற்கு, வினைத்திறனை மேம்படுத்துவதற்கு அணுகல் மற்றும் புத்தாக்கத்திற்காக டிஜிட்டல் மயமாக்கலாகும். 2026ஆம் ஆண்டிற்கான அரச டிஜிட்டல் மயமாக்கல் செலவினம் சுமார் ரூபா 30 பில்லியனாவதுடன் அது கீழ்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

- அரச நிறுவனங்களுக்கு டிஜிட்டல் உட்கட்டமைப்பை வழங்கல்
- தரவு மற்றும் தகவல் முகாமை
- டிஜிட்டல் தரம் மற்றும் பிரயோகங்கள்
- இணைப்பு மற்றும் தொடர்பாடல்
- பாதுகாப்பு மற்றும் மறைப்பொதுக்கம்
- மனித மற்றும் நிறுவன மேம்படுத்தல் ஆளுகை மற்றும் கொள்கை

**2026 இற்கு ரூபா 30.0 பில்லியன்**

| | |
|---|---|
| ரூபா 5.4 பில்லியன் | டிஜிட்டல் பொருளாதார முன்னேற்றம் |
| ரூபா 2.0 பில்லியன் | இலங்கை தனித்துவமான டிஜிட்டல் அடையாளத் திட்டத்தின் (SL-UDI) ஒருங்கிணைப்பு |
| ரூபா 0.6 பில்லியன் | பிரதேச செயலகங்களின் டிஜிட்டல் மயமாக்கல் |
| ரூபா 0.59 பில்லியன் | ஆரம்ப மட்டத்தில் ICT பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான e கிராம சேவகர் திட்டம் |
| ரூபா 0.6 பில்லியன் | திறைசேரியின் வருமானம் மற்றும் செலவின முகாமைத்துவத்தை செயற்படுத்துதல் மற்றும் செலவின அலகுகளுக்கு அறிக்கையிடல் அமைப்பு |
| ரூபா 3.2 பில்லியன் | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் அமைப்பு |
| ரூபா 1.0 பில்லியன் | குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிகள் |
| ரூபா 1.0 பில்லியன் | பொலீஸ் சேவையை டிஜிட்டல் மயமாக்கும் முயற்சிகள் |
| ரூபா 0.07 பில்லியன் | தரவு பாதுகாப்பு அதிகார சபை |
| ரூபா 0.75 பில்லியன் | இலங்கையின் டிஜிட்டல் தொழிற்றுறை மற்றும் புத்தாக்க சூழலை துரிதப்படுத்தல் (டிஜி தொழிற்றுறை) |
| ரூபா 0.65 பில்லியன் | டிஜிட்டல் வருமான பொருளாதார இயலுமாக்கல் மற்றும் துரிதப்படுத்தல் முன்னெடுப்பு (DigiRevSL) |
| ரூபா 0.5 பில்லியன் | இலங்கையில் டிஜிட்டல் திறன்கள் மற்றும் திறன் விருத்தியை மேம்படுத்தல் |
| ரூபா 0.95 பில்லியன் | டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபை வலுப்படுத்தல் மற்றும் அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புத்தளம் |



# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி – ரூபா 21.0 பில்லியன்

இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கு குறிப்பாக நாடு அறிவு மற்றும் புத்தாக்கம் சார்ந்த ஒன்றிற்கு மாற முனைவதனால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) பொதுச் செலவினம்) மிகவும் முக்கியமானதாகும்.

இது ஒரு பல்துறை சார் முயற்சி என்பதுடன் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. பலவேறுபட்ட பொது நிறுவனங்கள் தங்கள் துறைகளுக்கு ஏற்ப பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றன. 2026 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கீழ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக **சுமார் ரூபா 21.0 பில்லியன்** ஒதுக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டிற்கான முக்கிய ஆராய்ச்சி முயற்சிகள் பின்வருமாறு.



# பிரதான செலவின அம்சங்கள்

| | | |
|---|---|---|
| 1. | விவசாயத் துறையில் ஆராய்ச்சி முயற்சிகள் - ரூபா 10.2 பில்லியன் | ரூபா **10.2** பில்லியன் |
| அ. | விவசாயம் தொடர்பான பொருளாதார கணக்கெடுப்பு | ரூபா **1.1** பில்லியன் |
| ஆ. | தேசிய விதை உற்பத்தி மற்றும் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் | ரூபா **1.2** பில்லியன் |
| இ. | புதிய தொழில்நுட்பம் மற்றும் காலநிலைத் தாங்குதிறன் பயிற்சிகள் | ரூபா **0.4** பில்லியன் |
| ஈ. | துரிதப்படுத்தப்பட்ட விதை பண்ணைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | ரூபா **0.5** பில்லியன் |
| உ. | புதிய கலப்பினங்கள் மற்றும் திறந்த மகரந்தச் சேர்க்கை மிளகாய், சோளம், வெங்காயம் மற்றும் காய்கறி வகைகள் ஆகியவற்றின் அபிவிருத்தி மற்றும் விதைகளின் உற்பத்தி | ரூபா **0.17** பில்லியன் |
| ஊ. | தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தை செயல்படுத்துதல் | ரூபா **0.1** பில்லியன் |
| எ. | விவசாயம், கடற்றொழில் , பெருந்தோட்டம் மற்றும் கால்நடைகளில் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வசதி செய்தல் | ரூபா **4.4** பில்லியன் |
| ஏ. | பால் உற்பத்தி துறையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் | ரூபா **0.35** பில்லியன் |
| ஐ. | அதிகரிக்கப்பட்ட இனப்பெருக்கம் மூலம் திரவ பால் உற்பத்தியை அதிகரித்தல் | ரூபா **0.1** பில்லியன் |
| ஒ. | விலங்கு உற்பத்தி பண்ணைகளை நிறுவுதல் | ரூபா **0.1** பில்லியன் |
| ஓ. | கால்நடை ஆராய்ச்சியை செயல்படுத்துதல் | ரூபா **0.085** பில்லியன் |
| 2. | பொருளாதார சேவைகள் துறையில் ஆராய்ச்சி முயற்சிகள் | ரூபா **1.98** பில்லியன் |
| அ. | தேசிய தர உட்கட்டமைப்பு (NQI) முறைமையை வலுப்படுத்துதல் | ரூபா **0.37** பில்லியன் |
| ஆ. | கைத்தொழில்துறை அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஆதரவு | ரூபா **1.6** பில்லியன் |
| 3. | கல்வித் துறையில் ஆராய்ச்சி முயற்சிகள் | ரூபா **5.8** பில்லியன் |
| அ. | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஆதரவு | ரூபா **5.2** பில்லியன் |
| 4. | சுகாதாரத் துறையில் ஆராய்ச்சி முன்னெடுப்புகள் | ரூபா **1.7** பில்லியன் |
| அ. | சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சி | ரூபா **1.1** பில்லியன் |
| ஆ. | சுதேச மருத்துவம் தொடர்பான ஆராய்ச்சி | ரூபா **0.65** பில்லியன் |
| 5. | பொது சேவைகள் தொடர்பான ஆராய்ச்சி | ரூபா **1.3** பில்லியன் |
| அ. | விவசாயம் அல்லாத துறைகளில் பொருளாதார கணக்கெடுப்பு | ரூபா **0.8** பில்லியன் |
| ஆ. | சனத்தொகை மற்றும் சுகாதார மதிப்பீடு | ரூபா **0.57** பில்லியன் |

# காலநிலை மாற்றத்திற்கு எதிர்வினை

## காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை மாற்ற தாக்கம் என்றால் என்ன?

காலநிலை மாற்றம் என்பது வெப்பநிலை மற்றும் வானிலை அமைப்புக்களில் ஏற்படும் நீண்டகால மாற்றமாகும். காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் என்பது புவி வெப்பமடைதல் மற்றும் மாறிவரும் வானிலை முறைகள் பூமியின் இயற்கை அமைப்புகள் மற்றும் மனித சமூகங்களில் ஏற்படுத்தும் விளைவுகளாகும்.

## காலநிலை மாற்றம் இலங்கையை எவ்வாறு பாதிக்கும்?

ஒரு வெப்பமண்டல தீவுத் தேசமாக, இலங்கை காலநிலை மாற்றத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளதுடன் தீவிர வானிலை நிகழ்வுகளால் அபாய நிலையில் உள்ள முன்னணி நாடுகளில் இது தொடர்ந்து இடம் பெறுகிறது.

1. நீடித்த வரட்சி
2. திடீர்வெள்ளம்/மண்சரிவுகள் போன்ற இயற்கை அனர்த்தங்கள்
3. கடல் மட்டம் அதிகரிப்பு, கடலோர அரிப்பு மற்றும் புயல் எழுச்சி
4. அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் எதிர்பாரா மழைப்பொழிவு
5. அதிகரித்த வெப்பம்



## காலநிலை தாக்கங்களைத் தணிப்பதற்கு அல்லது இசைவாக்கம் அடைவதற்கு அரசாங்கம் எவ்வாறு ஆதரவளிக்கின்றது?

கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெவ்வேறு நிறுவனங்களில் செயற்படுத்தப்படுபவையாக உள்ளன இந்த காலநிலை மாற்றத் தணிப்பு மற்றும் தகவமைப்பு முயற்சிகளில் பெரும்பாலானவை திட்டமிடல் நிலைக் காலப்பகுதியில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பொதிக்கப்படுகின்றன. எனவே, சரியான குறிச்சொல் இல்லாமல் இந்த முயற்சிகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான செலவினங்களில் பெரும்பாலானவற்றை எளிதில் பிரிக்க முடியாது. இருப்பினும், பின்வரும் அம்சங்களை நேரடியாக அடையாளம் காணப்பட முடியும்.

**தகவமைப்பு** - தற்போதைய அபாயத்தை அல்லது காலநிலை மாற்றத்தின் எதிர்பார்க்கப்படும் தாக்கங்களைக் குறைக்கும் செயல்பாடுகள், காலநிலை மாற்றத்தின் எதிர்மறைத் தாக்கங்களுக்கான தாங்கு திறனை உருவாக்குதல்.

1. வெள்ள நீர் முகாமைத்துவம் மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிகால் அமைப்புகள்
2. நீர்ப்பாசனம் மற்றும் நீர் விநியோக உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்
3. கடலோர அரிப்பு, கடல் மட்ட உயர்வு மற்றும் புயல் எழுச்சி ஆகியவற்றிலிருந்து கரையோர சமூகங்களைப் பாதுகாத்தல்
4. முன்னெச்சரிக்கை முறைமைகள்
5. வறட்சியால் பாதிக்கப்படும் கிராமங்களுக்கு நிலையான நீர் மூலாதாரங்களை வழங்குதல்
6. காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்
7. உயர்த்தப்பட்ட பாதை வடிவமைப்புகளை உள்ளடக்குதல்
8. காலநிலை அனர்த்தங்களுக்கு பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்றம் செய்தல்

**தணிப்பு** – பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் அல்லது காபன் தேக்கத்தை அதிகரிக்கும் செயல்பாடுகள்

1. வீடுகள், சமய தலங்கள் மற்றும் பொது கட்டிடங்களில் சூரிய மின்கலத் தொகுதியை நிறுவுவதை ஊக்குவித்தல்
2. நாடு முழுவதும் காற்று மற்றும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குதல்
3. சீரழிந்த காடுகள் மற்றும் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டமைத்தல்

**நிவாரணம்** – இது காலநிலையால் உந்தப்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு வழங்கப்படும் குறுகிய கால அவசரகால ஆதரவைக் குறிக்கிறது.

1. வெள்ளம் அல்லது மண் சரிவுகளின் போதான வெளியேற்றல் மையங்கள், மீட்பு நடவடிக்கைகள்
2. நிவாரண விநியோகம், சுத்தமான நீர் வழங்கல்
3. நடமாடும் மருத்துவ பிரிவுகள், மருந்துகள், அவசரகால சிகிச்சை நிலையம்
4. இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான கூடாரங்கள், தற்காலிக வீடுகள்
5. மின்சாரம், நீர் மற்றும் சுகாதார உட்கட்டமைப்பை சரிசெய்தல்



# போதையற்ற தேசம்

இலங்கையில் இன்று காணப்படும் மிகவும் கடுமையான சமூக மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்று போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகும். இது தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களைப் பாதிக்கிறது, இதனால் அதிகரித்து வரும் குற்றங்கள், சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் சமூக உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது. எனவே, இலங்கை அரசாங்கம் போதைப்பொருள் கட்டுப்பாட்டுக்கான ஒரு விரிவான தேசிய மூலோபாயத்தை நிறுவியுள்ளது..



## தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்



1. **தடுப்பு மற்றும் கல்வி**

   தடுப்பு என்பது இளைஞர்கள் மற்றும் சமூகங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் போதைப்பொருட்களுக்கான தேவையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் பாடசாலை அடிப்படையிலான மற்றும் சமூக அடிப்படையிலான திட்டங்கள் மற்றும் வெகுஜன ஊடக பிரச்சாரங்கள் அடங்கும்.

2. **சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு**

   போதைக்கு அடிமையானவர்களுக்கு நச்சு நீக்கம் மற்றும் ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில் பயிற்சி மற்றும் மீள் ஒருங்கிணைப்பு திட்டங்களை வழங்கும் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்கள் தலங்கம, கண்டி, காலி, நிட்டம்புவ உட்பட நாடு முழுவதும் உள்ளன. அவை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
   மேலும், சிகிச்சை திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் நியமிக்கப்பட்டதும் மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களை ஒரு பிரிவாகவும் நிறுவியுள்ளது, மேலும் இந்தப் பிரிவின் கீழ் சுமார் 13 நியமிக்கப்பட்ட சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் பல்லேகலே, பல்லன்சேன, வட்டரக, கண்தேவத்த, தல்தேன, மீதிரிகல, வீரவில, அம்பேபுஸ்ஸ, அனுராதபுர மற்றும் கண்டகாடு ஆகியவை அடங்கும்.

3. **சட்ட அமுலாக்கம் மற்றும் விநியோகக் குறைப்பு**

   இலங்கை பொலிஸ், இலங்கை சுங்கம் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களம் ஆகியவற்றின் மூலம் கடுமையான முறையில் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் மூலம் சட்டவிரோத போதைப்பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் செயல்படுகிறது.

மேற்குறித்த முயற்சிகளுக்கான செலவு பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் இலங்கை பொலிஸ் திணைக்களம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை, புனர்வாழ்வு பணிமனை, சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் சமுதாயம் சார் சீர்திருத்த திணைக்களம் உள்ளிட்ட பிற பொது நிறுவனங்களிலிருந்து பெறப்படுகின்றது. இருப்பினும், இந்த நிறுவனங்களில் பெரும்பாலானவற்றில், போதைப்பொருள் தடுப்பு என்பது முக்கிய கடமைகளில் ஒன்றாகும், மேலும் மேற்குறித்த முயற்சிகளுக்கான சரியான செலவினங்களைப் பிரித்து அளவிடுவது கடினமாகும். மேற்குறித்த முயற்சிகளுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான இத்தகைய நேரடியாக அடையாளம் காணக்கூடிய நிறுவனங்களின் செலவானது ரூபா 1,800 மில்லியன் ஆகும்..

# உட்கட்டமைப்பு பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு

உட்கட்டமைப்பு பராமரிப்பு, புனமைப்பு மற்றும் மேம்படுத்துதல் என்பது, காலப்போக்கில் சரிவு நிலையை நிவர்த்தி செய்து செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக, வீதிகள், பாலங்கள், கட்டிடங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் பிற பயன்பாடுகள் போன்ற தற்போதைய உட்கட்டமைப்பு சொத்துக்களின் செயல்பாடு மற்றும் ஆயுட்காலத்தை தொடர்ந்து பராமரித்தல் ,பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதல் மூலம் பாதுகாத்தல், மீட்டமைத்தல் மற்றும் அதிகரித்தல் ஆகியவற்றின் தொடர்ச்சியான செயல்முறையாகும். பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது மிகவும் முக்கியம். ஆண்டுதோறும், அரசாங்கம் மேற்கண்ட நோக்கத்திற்காக பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கணிசமான தொகையை ஒதுக்குகிறது.

2026 ஆம் ஆண்டில், வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள் சுமார் ரூபா 292 பில்லியன் மேற்படி நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முக்கிய துறைகள் வாரியாக இந்த ஒதுக்கீட்டின் விவரம் பின்வருமாறு.



| சுகாதாரத் துறை | ரூபா 38.7 பில்லியன் |
|---|---|
| அ. வைத்தியசாலைக் கட்டிடங்கள், உபகரணங்கள் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு | ரூபா 32.6 பில்லியன் |



| கல்வி | ரூபா 33.7 பில்லியன் |
|---|---|
| அ. பாடசாலைக் கல்வி தொடர்பான கட்டிடங்கள், உபகரணங்கள் பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் மேம்பாடு | ரூபா 30.6 பில்லியன் |
| ஆ. தொழிற்கல்வி தொடர்பான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு | ரூபா 2.3 பில்லியன் |



| போக்குவரத்து | ரூபா 94.0 பில்லியன் |
|---|---|
| அ. வீதி மற்றும் பாலங்கள் பராமரிப்பு, புனரமைப்பு, விரிவு படுத்துதல் மற்றும் மேம்பாடு | ரூபா 79.3 பில்லியன் |
| ஆ. ரயில் என்ஜின்கள், பயணிகள் பெட்டிகள், ரயில் பாதைகள், ஒற்றை அமைப்புகள் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு | ரூபா 14.5 பில்லியன் |



| விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் | ரூபா 29.2 பில்லியன் |
|---|---|
| அ. சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான நீர்ப்பாசன அமைப்புகளின் புனரமைப்பு | ரூபா 12.5 பில்லியன் |
| ஆ. மாகாண சபைகளால் விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் கால்நடை தொடர்பான உட்கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்தல் | ரூபா 13.6 பில்லியன் |



| அமைதியான மற்றும் நியாயமான சமூகம் | ரூபா 13.2 பில்லியன் |
|---|---|
| அ. பொலீஸ் நிலையங்கள், பொலீஸ் வாகனங்கள் மற்றும் பொலீஸ் திணைக்களத்தின் கீழ் உள்ள பிற உட்கட்டமைப்புகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு | ரூபா 4.0 பில்லியன் |
| ஆ. சிறைச்சாலை தொடர்பான சொத்துக்களின் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு | ரூபா 0.98 பில்லியன் |



| தேசிய பாதுகாப்பு (முப்படைகள் தொடர்பான சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு) | ரூபா 35.0 பில்லியன் |
|---|---|



| பொதுச் சேவைகள் | ரூபா 41.7 பில்லியன் |
|---|---|
| அ. மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு | ரூபா 8.7 பில்லியன் |
| ஆ. மாகாண சபைகளின் கீழ் உள்ள சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு (வீதிகள், சுகாதாரம், கல்வி, விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் தவிர) | ரூபா 27.0 பில்லியன் |



## தேசிய வரவு செலவுத்திட்டம் 2026

# மக்கள் வரவுசெலவுத்திட்டம்

**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**

செயலகம், கொழும்பு 01

**தொலைபேசி :**
+94 112 484 600
+94 112 484 500
+94 112 484 700

**தொலைநகல் :**
+94 112 449 823

**மின்னஞ்சல் :**
info@mo.treasury.gov.lk

அரசாங்க அச்சுத் திணைக்களம்